*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(2), 2020*

# 20ஆம் நூற்றாண்டில் கண்டி முஸ்லிம்களது திருமண சம்பிரதாயங்கள்: உடத்தலவின்னை மடிகே கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஹாஸிம் பாத்திமா பிர்தௌஸியா**
**சமூக விஞ்ஞானங்கள் துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: firdawsiyafac@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கலாசார பண்பாட்டு அடித்தளத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டுள்ள இவ்வாய்வானது, 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கண்டி முஸ்லிம்களது திருமணச் சம்பிரதாயங்களை அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. அதற்காக கண்டி மாவட்டம், பாத்ததும்பறை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட உடத்தலவின்னை மடிகே எனும் கிராமத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது உடத்தலவின்னை கிராமத்தில் முன்னைய நூற்றாண்டில் திருமணம் தொடர்பாக நிலவிய பல்வேறு சடங்குகள், சம்பிரதாயங்கள் பற்றி அறிந்து கொள்வதை நோக்காகக் கொண்டமைந்துள்ளது. அத்தோடு குறித்த சம்பிரதாயங்களில் ஊடுருவியிருந்த மாற்றுமத கலாசார அம்சங்கள் பற்றியும் அச்சடங்குகளில் வெளிப்பட்ட ஏனைய சமூகங்களுடனான சகவாழ்வுப் பண்புகளையும் இவ்வாய்வின் மூலம் கண்டறிவதும் முக்கிய நோக்கமாகும். குறித்த கிராமம் தொடர்பாக இது வரையில் எவ்வித வரலாற்றுத் தொகுப்பும் உருவாக்கப்பட்டிருக்காத நிலையில், இவ்வாய்வானது ஒரு குழுக்கலந்துரையாடலுடன் நேர்காணல்களைப் பிரதானமாகக்கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இரண்டாந்தர மூலாதாரங்களாக ஆய்வுக்கட்டுரைகளும் நூல்களும் இணையமும் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இம்மக்களிடம் திருமணப் பேச்சுவார்த்தை முதல் திருமணத்திற்கு முன்னரான நாட்களிலும் மற்றும் திருமண நாளிலுமாக பல்வேறு சம்பிரதாயங்கள் நிலவியுள்ளதுடன், இச்சம்பிரதாயங்கள் குறித்த மணமகளது முதல் பிரசவம் வரையில் வெவ்வேறாக தொடரப்பட்டுள்ளதை ஆய்வில் கண்டறிய முடிந்தது. அத்தோடு ஊரில் உள்ள சக சமூகத்தவர்களையும் இணைத்தவாறு பரஸ்பரம் உதவி ஒத்தாசைகளை பெற்றும் வழங்கியும் இச்சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறான சமூக வழக்காறுகள் ஊடாக உடத்தலவின்னை கிராம மக்கள் மத்தியில் இன, மத பேதங்களும் விரிசல்களும் ஏற்படாது சமூகங்களிடையில் நல்லிணக்கத்தின் அடிப்படையில் உறவு வளர்க்கப்பட்டு வந்துள்ளமையையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிந்தது. மேலும் இத்திருமண சம்பிரதாயங்களுள் பெரும்பாலானவை சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுடனான உறவுகளால் ஏற்பட்ட பண்பாட்டுச் செல்வாக்குகளாக அடையாளப்படுத்தவும் முடிந்துள்ளது. மேலும் தற்காலத்தில் இவ்வூரில் நடைமுறையில் உள்ள சில திருமண சம்பிரதாயங்கள் 20ஆம் நூற்றாண்டின் தொடர்ச்சியாக தலைமுறைகள் கடந்து செல்வாக்கு பெற்றுள்ளமையையும் தெளிவுற முடியுமாக இருந்தது.

**பிரதான சொற்கள்:** உடத்தலவின்னை மடிகே, திருமணம், மணமகன், மணமகள், சம்பிரதாயங்கள்

## 1. அறிமுகம்

மனித வாழ்வில் இன, மத, மொழி, நிற மற்றும் தேசம் கடந்ததும் பாரபட்சமற்றதுமான ஒரு வாழ்வியல் அங்கமாக திருமணம் காணப்பெறுகின்றது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள, செய்யப்படும் வாழ்க்கை ஒப்பந்தமாக திருமணம் திகழ்கின்றது. அது

மனித சமுதாயத்தின் வாழ்வறத்தைப் பேணிட உருவாக்கிக்கொள்ளப்பட்டதோர் ஒழுக்க முறையுமாகும். திருமணமானது உலகளாவிய பொதுமைபட்டதோர் அம்சமாகத் திகழ்ந்த போதிலும் அது வெவ்வேறு பண்பாடுகளையுடைய மனிதக் குழுவினரிடையே வெவ்வேறு விதிமுறைகளையும் வழக்காறுகளையும் கொண்டதாய் அமையப் பெற்றுள்ளது.

அவ்வகையில் ஓரே சமயம், இனம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் குழுவினரேயானாலும் அவர்களிடையிலான பிரதேச ரீதியிலான வேறுபாடுகள், ஏனைய சமூகத்தவர்களுடனான தொடர்புகள் போன்ற காரணிகளினால் அவர்களது பண்பாட்டு அம்சங்களில் வேறுபாடுகள் உருவாகின்றன. அப்பண்பாடுகள் ஒவ்வொரு பிரதேசத்தவர்களையும் வேறு பிரித்துக்காட்ட வல்லனவாயும் உள்ளன. அவ்வாறு நோக்கும் போது, இலங்கை முஸ்லிம் சமூகத்தை எடுத்துக்கொண்டால் குழந்தைக்குப் பெயர் வைத்தல், காது குத்துதல், கத்னா வைபவம் (பேச்சுவழக்கில் முஸ்லிம்களது சுன்னத்துக் கல்யாணம்) மஞ்சல் நீராட்டு விழா, திருமணம், மரணச் சடங்கு போன்ற சடங்குகளின் போது பிரதேசத்திற்குப் பிரதேசம் பல்வேறு விதமான சம்பிரதாயங்களைக் கையாளக் காணலாம். இதற்கு இலங்கை முஸ்லிம்களது வரலாறு மற்றும் வாழ்க்கை முறைமை தொடர்பாக மாவட்ட அடிப்படையில் இலங்கை முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் மற்றும் அமைச்சினால் காலத்திற்குக் காலம் ஆய்வு செய்து, தொகுத்து வெளியிடப்பட்ட நூல்கள் மற்றும் தனிநபர்களினால் வெளியிடப்பட்ட பல்வேறு முஸ்லிம் ஊர்களது வரலாறு தொடர்பான நூல்களை ஒப்பிட்டு நோக்கும் போது இந்த வேறுபாடுகளை தெளிவுறலாம். அதற்கு சிறந்த உதாரணமாக திருமண வைபவத்தை குறிப்பிடலாம். இங்கு பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் என எடுத்து நோக்கும் போது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களது வாழ்வியல் அம்சங்களில் பல வேறுபாடுகள் இருப்பதை கண்கூடாகக் கண்டுகொள்ளலாம். அவ்வாறே அவ்வொவ்வொரு திக்கிலும் வாழும் முஸ்லிம் சமூகத்தவரிடையேயும் பிரதேச ரீதியாக பண்பாட்டுக் கோலத்தில் வித்தியாசங்களைக் காணலாம்.

அவ்வாறு வேறுபட்ட பண்பாட்டு அம்சங்களுள் ஒன்றான திருமண சம்பிரதாயங்களை கண்டியில் உடத்தலவின்னை மடிகே எனும் கிராமத்தை மையமாகக் கொண்டு அடையாளம் காணுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். ஆகவே இங்கு ஆய்வின் கால எல்லையாக 20ஆம் நூற்றாண்டு கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக உடத்தலவின்னை கிராமத்தில் குறித்த ஆய்வுக்காலப்பகுதியில் நிலவிய திருமண சம்பிரதாயங்களது பல்வகைப்பட்ட தன்மையை அறிந்து கொள்வது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அத்தோடு கிராமத்தில் சிங்கள-முஸ்லிம் மக்கள் எவ்வாறு சகோதர வாஞ்சையுடன் பழகி தம்மிடையிலான சகவாழ்வு எனும் சமூக ஒழுக்கத்தை பரஸ்பர உதவி ஒத்தாசை மூலம் பரிமாறிக் கொண்டனர் என்பதைப் பற்றியும் இவ்வாய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 20ஆம் நூற்றாண்டில் நிலவிய திருமண சம்பிரதாயங்களுள் இன்றுவரையில் தலைமுறைகள் கடந்து வாழும் சம்பிரதாயங்களை அடையாளம் காணுவது இவ்வாய்வின் துணை நோக்கமாகும்.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வூரின் வரலாறானது கேள்வி ஞானத்தின் அடிப்படையிலேயே அங்கும் இங்குமாக விரவியுள்ளது. ஆகையால் இவ்வூரின் கடந்தகால வரலாறு தொடர்பான முறையான ஆய்வுகளின் அடிப்படையில் அமையப்பெற்ற ஆய்வு நூல்களையோ ஆய்வுக்கட்டுரைகளையோ பெற முடியவில்லை. ஆகவே இவ்வாய்வானது கட்டமைக்கப்படாத நேர்காணல்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேர்காணலுக்கு ஒத்தழைத்தவர்களுடன் நேரடியாகச் சென்று கலந்துரையாடலூடாக நேர்காணல்களில் தகவல் பெறப்பட்டுள்ளது. இதற்காக ஊரில் இவ் ஆய்வுத் தலைப்பு தொடர்பாக அனுபவ அறிவுடையவர்களான மூத்த, சமூக உறப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நேர்காணலின் அனைவரிடமும் ஒரே மாதிரியிலான கேள்விகள் எழுப்பப்பட்டு தகவல்கள் உறுதி செய்யப்பட்டதுடன் அவர்களது சொந்த அனுபவங்கள் தொடர்பாக அவற்றில் பங்குடைய ஏனைய அங்கத்தவர்களிடம் குறித்த தகவல்கள் உறுதி செய்யப்பட்டன. மேலும் பல்வேறு தரப்பினரிடம் பெறப்பட்ட புகைப்பட ஆதாரங்களூடாகவும் தகவல்கள் உறுதி செய்யப்பட்டன. ஊரில் உள்ள வயது முதிர்ந்த

பெண்களுள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுடனான ஒரு குழுக் கலந்துரையாடல் மூலமாகவும் இவ்வாய்விற்கு தகவல் பெறப்பட்டுள்ளது. இதன் போது வயது முதிர்வு காரணமாக ஆய்வின் உண்மைத் தன்மைக்கு பங்கம் ஏற்படாதிருக்கும் வகையில் சிந்தனைத் தெளிவுடைய உடல், உள ரீதியாக ஆய்விற்கு ஒத்துழைக்கக் கூடிய ஆரோக்கியமான நிலையில் உள்ள ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாந்தர மூலாதாரங்களாக இணையம் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளும் அல்குர்ஆன், ஹதீஸ் (திர்மிதி) போன்ற நூல்கள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. இஸ்லாம் கூறும் திருமண விதிமுறைகள்

திருமணத்தின் மூலமாக உருவாகும் குடும்ப அலகையே இஸ்லாம் ஏற்கின்றது. ஆகவே இஸ்லாமிய சமூக அமைப்பினுள் திருமணத்திற்கு மிக முக்கியமான இடம் அளிக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் திருமணத்தை வெறுமனே ஒரு சடங்காகக் கருதவில்லை. அதனை ஒரு சமூக ஒப்பந்தமாகக் கருதுகின்றது. அத்தோடு சிவில் ஒப்பந்தங்களில் உயர்ந்த ஒப்பந்தமாகவும் திருமணத்தை மதிக்கின்றது.

திருமணமானது இஸ்லாம் சமயத்தில் ஒரு வணக்க முறையாகவே நோக்கப்படுகின்றது. அத்தோடு நபிகளாரது வாழ்க்கை வழிமுறையாகவும் உள்ளது. ஆகவே ஒரு முஸ்லிம் உரிய வயதில் திருமணம் செய்து கொள்வதை இஸ்லாம் வரவேற்கின்றது. இஸ்லாம் சமயத்தில் முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய இரு வகையான வணக்க முறைகள் பற்றி கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தொழுகை உட்பட்ட கட்டாயக் கடமைகள் போன்றே கட்டாயமற்ற வணக்கங்கள் ‘சுன்னத்’ என்பதாக அறியப்படுகின்றன. அவ்வாறான சுன்னத்தான வணக்கங்களுள் திருமணமானது ‘சுன்னத் முஅக்கதா’ எனும் கட்டாயமற்ற, ஆனால் வலியுறுத்தப்பட்ட வணக்கங்களது பிரிவினுள் வைத்து நோக்கப்படுகின்றது. அதாவது இவ்வணக்க முறை மூலம் ஒரு முஸ்லிம் ஆன்மீக ரீதியில் இறைவனிடம் பெரும் நன்மைகளைப் பெறுவதுடன் பாவங்களில் இருந்து தன்னை தற்காத்துக்கொள்ள அது வாய்ப்பாகின்றது. அதனை தவிர்க்கும்பட்சத்தில் பாவமான வழிகளில் அவனது வாழ்க்கை நகருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் நிலவும் (Meraj,2018).

“உங்களில் எவருக்கும் வாழ்க்கைத் துணை இல்லாவிட்டால் அவர்களுக்குத் திருமணம் செய்துவிடுங்கள்” *(அல்குர்ஆன்,24:32)* என அல்குர்ஆன் முஸ்லிம் சமூகத்தைப் பார்த்து கட்டளையிடுகின்றது. ஏனெனில், இருபாலாருக்கும் இருபாலார் மீதான தேவைகள் உடல், உள, சமூக ரீதியாகப் பின்னிப் பிணைந்துள்ளமையினாலாகும். ஆகவே ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய வயதில் வாழ்க்கைத் துணைகளை திருமணம் எனும் ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்திக் கொடுப்பது கட்டாயமானதாகும்.

ஆணும் பெண்ணும் தான் விரும்பும் எதிர்பாலாருக்கு பெற்றார் அல்லது தன் குடும்பத்தில் உள்ள மூத்தவர்கள் மூலமாகத் தெரியப்படுத்துவதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. அதேபோல திருமணத்தைப் பேசிச் செய்வதையே இஸ்லாம் விரும்புகின்றது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரையொருவர் நேரடியாகப் பார்த்து பேசிக் கொள்வதும் அப்பேச்சுவார்த்தைகளில் இருசாராரும் திருப்தி அடைவதையும் இஸ்லாமிய திருமண விதிமுறைகளில் பிரதான அம்சங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளது. அதிலும் பெண்ணின் விருப்பம் பெறுவதை இஸ்லாம் முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கக் காணலாம் (Jaafar,2011). “கன்னிப் பெண்ணை அவளது சம்மதம் பெறாமல் திருமணம் செய்து வைக்கலாகாது” *(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸுனன் திர்மதி).*

இதுதவிர மணமகளுக்கான மணக்கொடையான மஹரை இஸ்லாம் வலியுறுத்தி கட்டாயப்படுத்தியும் உள்ளது. “பெண்ணுக்குரிய மஹரை கடமையெனக் கருதி மனமுவந்து அளித்துவிடுங்கள்” *(அல்குர்ஆன்,4:4).* அத்தோடு, நபிகளாரும் சிறிய தொகையேயாயினும் மஹர் தொகையை அளித்துவிடுங்கள் என்பதாக வழிகாட்டியுள்ளார்கள். இஸ்லாமிய அறிஞர்களது

கருத்துப்படி, நிக்காஹ் ஒப்பந்தத்தின் போது உடனடியாக மஹர் தொகையை அளித்துவிடுதல் சாலச் சிறந்த விடயமாகும்.

இஸ்லாத்தில் திருமணம் ஒன்று ஏற்கப்பட வலி (பெண்ணுக்குப் பொறுப்பானவர்), சாட்சிகள், ஈஜாப்-கபூல் (ஒப்படைத்தலும் ஏற்றுக் கொள்ளுதலும்), மஹர் என்பன அவசியம் இடம்பெறுதல் வேண்டும் (Jaafar,2011). இவையனைத்தையும் உள்ளடக்கிய எளிமை இழையோடிய வைபமாக திருமணத்தை இஸ்லாம் வரவேற்கின்றது.

## 4. உடத்தலவின்னை கிராமம்

இலங்கையில் இயற்கை அரண்கள் சூழ்ந்த மலைநாட்டின் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறை தேர்தல் தொகுதிக்குட்பட்ட ஒரு முஸ்லிம் கிராமமே உடத்தலவின்னை மடிகே கிராமமாகும். வத்தேகெதரை, பள்ளேதலவின்னை, ஜம்புகஹபிட்டிய, தொரகமுவ, மீகம்மன, மடவளை எனும் கிராமங்களினால் சூழப்பட்டதாக உடத்தலவின்னை கிராமம் அமையப்பெற்றுள்ளது. அதன்படி, இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்வதுடன் அடுத்தபடியாக சிங்களவர்களும் சிறிதளவில் தமிழ் மக்களுமாக வாழ்கின்றனர். இவற்றுள் வத்தேகெதரை மற்றும் மடவளை தவிர்ந்த ஏனைய கிராமங்கள் பெரும்பான்மையாக சிங்கள மக்களைக் கொண்டவையாகும். தற்சமயம் சுமார் 5000 பேரளவில் (https://mapcarta.com) வசிக்கும் இக்கிராமத்தில் தமிழ், சிங்களம் என்பன பேச்சு மொழியாகத் திகழ்கின்றன. பொதுவாக இங்கு வாழும் முஸ்லிம் மக்கள் சிங்கள மொழியில் கிட்டிய பரீச்சயம் உடையவர்களாக விளங்குவதுடன் இரு சமூகத்தாரிடையில் பரஸ்பர நட்புறவும் நிலைத்துள்ளது.

### 4.1 20ஆம் நூற்றாண்டில் உடத்தலவின்னை மடிகே கிராமத்தின் சமூக பொருளாதார நிலைமைகள்

உடத்தலவின்னை கிராமத்தின் முஸ்லிம் மக்களது திருமண சம்பிரதாயங்களைப் பற்றி நோக்க முன்னர் அக்கிராமத்தின் சமூக, பொருளாதார நிலைமை குறித்து அறிந்திருப்பது அவசியமாகும். உடத்தலவின்னை மடிகே கிராமமானது ஆய்வுக் காலப்பகுதியான 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில். பின்தங்கியதோர் கிராமமாகவே இருந்தது. சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இன்றுள்ள நிலைமையை விடவும் மிகவும் பிற்போக்குத் தன்மை கொண்டதாகவே அதன் செயற்பாடுகள் அமையப் பெற்றிருந்தது (நேர்காணல் இல:1).

பெரியளவிலான தொழில் செய்யக் கூடியவர்களோ பெருந்தொகை இலாபமீட்டக்கூடிய பின்னணியுடைய வியாபாரிகளோ இக்காலப்பகுதியில் இங்கு இருக்கவில்லை. அவர்களுள் ஓரளவேனும் வசதியுடையவர்களாகக் கருதப்பட்டவர்கள் 'பொட்டணி வியாபாரம்' செய்யக்கூடிய துணி வியாபாரிகளே ஆவர். 'மணிப்பெட்டி' வியாபாரமும் இருந்தது. அத்தோடு சொந்தமாக வயல் நிலங்களைக் கொண்டிருந்த மக்களும் ஓரளவு வசதியுடையவர்களாகவே விளங்கினர் (நேர்காணல் இல:1). பொதுவாக வீடு, காணி நிலங்கள் உடையவர்கள் வசதியானவர்களாகக் கருதப்பட்டனர். மற்றவர்கள் வயல் உழுதல், முட்டை சேகரித்து விற்றல், வெற்றிலை, பாக்கு, கொக்கோ, சாதிக்காய், கராம்பு சேகரித்தல் போன்ற சிறிய வருமானமுடைய தொழில்களையே ஆற்றி வந்தனர் (நேர்காணல் இல:1,2). இம்மக்களது பொருளாதார ரீதியாகப் பின்னடைந்த நிலைமையானது, அவர்களது கலாசாரப் பண்பாட்டு விடயங்களிலும் செல்வாக்கு செலுத்தியமையினை திருமணம் சார்ந்த செயற்பாடுகளில் அடையாளம் காண முடிகின்றது.

சமூக ரீதியாக நோக்கும் போது இக்கிராம முஸ்லிம்களிடம் மனிதம் சார்ந்த விழுமியப் பண்புகள் நிலவிய போதிலும் சமூக ரீதியாக பாதாளத்தில் தள்ளிவிடக்கூடிய தீய பழக்கவழக்கங்கள் இருந்ததாக நேர்காணல்களின் போது அறிய முடிந்தது. அதாவது நேர்காணல் இல.01இல் அவரது பாடசாலைக் காலத்தில் பாதைகளில் மதுபானமருந்தி சுய நினைவின்றி ஆங்காங்கே ஆடைகளும் நழுவிய நிலையில் சிலர் போதையில் மூழ்கியிருப்பதை பொதுவாகக் காண முடிந்துள்ளது. அதற்கு குறித்த காலப்பகுதியில் இக்கிராமத்தில் நிலவிய ஆன்மீக வறுமையே காரணம் என்பதாகக் கருத்துரைத்தார். ஊருக்குள் 'தாய்ப்பள்ளி' என இன்றும் மக்களால்

அறியப்படும் கலதெனிய எனும், ஊரின் ஒரு பிரதேசத்தில் மட்டும் ஒரு பள்ளிவாயல் இருந்துள்ளது. இன்றைய நாட்களைப் போல பிரதேசத்திற்குப் பிரதேசம் தக்கியாக்கள் காணப்பெறவில்லை (நேர்காணல் இல:2). அன்றைய நாட்களில் ஐந்து நேர தொழுகைகளுக்குக் கூட முறையாக அதான் ஒலிக்கப்படவில்லை. வெள்ளிக் கிழமையன்று ஜும்ஆத் தொழுகை நடாத்தும் அளவிற்கு மக்கள் வராததனால் ளுஹர் (பகல்நேரத் தொழுகை) தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீடு திரும்பிய பல சந்தர்ப்பங்கள் இருந்துள்ளது (நேர்காணல் இல:1). மார்க்கக் கல்வியை முழுமையாகக் கற்று மக்களை வழிநடாத்தக்கூடிய மதப்போதகர்களும் இருக்கவில்லை. ஆயினும் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றக்கூடியவர்களை மிக்க மரியாதையுடன் நடாத்தியதுடன் அவர்களுக்கு சமூகத்தில் உயரந்த கௌரவம் அளிக்கப்பட்டது. இந்த ஆன்மீக வறுமை நிலைமை படிப்படியாக பிற்பட்ட காலத்தில் மாற்றமுற்று வந்துள்ளது.

சமூக நோக்கில் பார்க்கும் போது, இவர்களது வாழ்வில் சமய ரீதியிலான தனித்துவங்களை அடையாளப்படுத்துமளவில் அடையாளங்கள் குறைவுற்றிருந்தாலும் சமய அறப்போதனைகளது செல்வாக்கினாலான ஐக்கியம், ஒற்றுமை, பரஸ்பரம் உதவி செய்து கொள்ளும் மனப்பான்மை, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுதல் போன்ற பல விழுமியப் பண்புகளை ஆய்வினூடாக அடையாளப்படுத்த முடிந்தது.

எனவே இந்த ஆன்மீக வறுமை இவர்களுடைய கலாசாரப் பண்பாட்டு அம்சங்களில் பிரதிபலித்தமையை இவ்வாய்விலிருந்து கண்டுகொள்ளமுடிந்த பிறிதோர் முக்கிய அம்சமாகும். மாற்றுமத சகோதரர்களுடனான நெருங்கிய உறவின் காரணமாக அவர்களது சமூகக் கலாசார செல்வாக்குகள் இவர்களுடைய பண்பாட்டம்சங்களில் இரண்டறக் கலந்திருந்தன. சமூகமொன்றின் தனித்துவமொன்று இழக்கப்படும் போது அது பிறிதொரு சமூகத்தின் தனித்துவப் பண்புகளினால் ஈர்க்கப்படுவது சமூக இயல்பாகும்.

இப்பின்னணியிலிருந்து உடத்தலவின்னை மடிகே கிராமத்தின் திருமணம் சார்ந்த நடவடிக்கைகள், சம்பிரதாயங்கள் தொடர்பாகப் பின்வருமாறு நோக்கலாம்.

#### 4.2 திருமணத் தொடர்புகள்

உடத்தலவின்னை கிராமத்துடனான திருமணத் தொடர்புகள் என நோக்கும் போது, இக்கிராமத்தில் இக்குறித்த காலப்பகுதியில் அதிகளவிலான திருமணப் பேச்சுவார்த்தைகள் ஊரினுள்ளேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குப் பல காரணங்கள் நிலவுகின்றன. ஏனைய ஊரவர்களை விட சொந்த ஊர் மக்களைப் பற்றி நன்கு விசாரித்து அறிய முடியுமாக இருந்தமை, ஊரவர்கள் மீதான நம்பகத்தன்மை அதிகமாக இருந்தமை, சொந்தம் விட்டுச் செல்லக் கூடாது எனும் எண்ணம் போன்ற பல காரணிகள் நிலவின (நேர்காணல் இல:2). ஆயினும் பொதுவாக அயல் கிராம மக்கள் மத்தியில் பிரபலமாக நிலவும் எண்ணப்போக்காக, இக்கிராமத்தவர்கள் சமூகத்தில் தாழ்ந்த (குலத்தால் தாழ்ந்தவர்கள்) மக்கள் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எனும் கருத்து நிலவியதாக (நேர்காணல் இல:1,2) நேர்காணலின் போது தகவல் அறியப்பட்டது.

நேர்காணல்களில் அறிய முடிந்த விடயம் யாதெனில், பொதுவாக உடத்தலவின்னை மடிகே கிராமத்துடனான மடவளை, அக்குரணை, மாத்தளை போன்ற ஊரவர்களது திருமணத் தொடர்புகள் மிகவும் குறைந்தளவிலேயே இடம்பெற்றுள்ளமையாகும் (நேர்காணல் இல:1,2,3). இந்நிலைமையானது இன்று வரையில் தொடர்ந்து வருவதாகவும் அறியப்பட்டது. இது முன்னைய நூற்றாண்டுக் காலப்பகுதியில் இல்லையென்று கூறத்தக்க அளவில் இருந்துள்ளதுடன் இவை தவிர்ந்த வேறுசில ஊர்களுடன் மட்டும் திருமணத் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இனிகலை, கெக்கிராவை, கடுகண்ணாவை, உகுரஸ்ஸபிட்டிய, தெல்தோட்டை போன்ற ஊர்களுடன் பிற்காலத்தில் திருமணத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன (நேர்காணல் இல:2).

இவ்வாறு திருமணத் தொடர்புகள் மட்டுப்பட்டதாகவும், ஒரு சில ஊரவர்கள் இக்கிராம முஸ்லிம்களுடனான திருமண உறவை விரும்பாமைக்கும் காரணியாகக் கூறப்பட்டுவரும் வாய்மொழிக் கதையாகப் பின்வரும் ஆதாரமற்ற சம்பவம் அண்மித்த ஊரவர்களிடம் நிலவுகின்றது. மலையக மன்னன் இங்கு வந்த அராபியர்களை தமக்குப் பிடித்தமான சிங்களப்

பெண்களைத் திருமணம் செய்து கொள்ள அனுமதித்ததாகவும் மடவளை, அக்குரனை வாழும் முஸ்லிம்களது மூதாதையர் உயர் குல சிங்கள பெண்களை மணந்து கொண்டதாகவும் உடத்தலவின்னை கிராமத்தில் வாழும் முஸ்லிம்களது முன்வழிச் சென்றவர்கள் தாழ்குல சிங்களப் பெண்களை குலமறியாது மணந்து கொண்டதாகவும் ஓர் ஆதாரமற்ற கற்பனைக் கதை வழக்கில் உள்ளது (நேர்காணல் இல:1).

இக்கதையின்படி, பிரதானமாக மடவளை, அக்குரணை போன்ற இக்கிராமத்திற்குக் கிட்டிய முஸ்லிம் கிராமத்தவர்கள் உடத்தலவின்னையுடனான திருமண உறவினை தவிர்த்துவர குல வேறுபாடு ஒரு காரணியாகக் கொள்ளப்பட்டமையை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும், இங்கு வெளிப்படும் விடயம் யாதெனில், திருமண சம்பிரதாயங்களில் ஏனைய மாற்றுமத சமூகத்தவர்களது சம்பிரதாயங்கள் ஊடுருவியுள்ளமையாகும். தமிழ் மக்கள் மத்தியில் சாதி வேறுபாடும் சிங்கள மக்கள் மத்தியில் குல வேறுபாடும் நிலவுகின்றமையானது, எவ்வித சமூக வேறுபாடுமின்றியிருக்க வேண்டிய சமயப் பின்புலம் உடைய முஸ்லிம்கள் மத்தியில், எந்தளவிற்கு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதனை இதுனூடாகக் கண்டுகொள்ளலாம். இந்நிலைமை இன்றளவிலும் பாரியளவில் மாறியுள்ளதாக அறியமுடியவில்லை. குறித்த ஊர்களுடன் ஆங்காங்கே ஓரிரு திருமண உறவுகள் மேற்கொள்ளப்பட்டாலும், காலமாற்றம் எனக் கூறப்படும் அளவிலான பாரிய மாற்றங்கள் எதுவும் இடம்பெற்றிருப்பதாக நேர்காணலின் போது தகவல்பெற முடியவில்லை. ஆயினும் இன்றையத் திருமண உறவுகள் மேற்குறித்த ஊர்களிடையில் இடம்பெறாமைக்கு இக்காரணம் கூறப்படுவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். பல தலைமுறையாக மறுக்கப்பட்டு வந்த வழக்கமானது இன்று வரையில் குறித்த சமூகத்தவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதே யதார்த்தமாகும்.

இவ்வாறு உடத்தலவின்னை மடிகே கிராமத்துடனான திருமண உறவுகள் கிட்டிய முஸ்லிம் கிராமங்களினால் பெருமளவில் தவிர்க்கப்படுவதன் பின்னணியில், உண்மையில் நிலவிய காரணி யாதெனில், இக்கிராமத்தின் ஆன்மீக வறுமை மற்றும் சமூக ரீதியாகப் பின்னடைந்த நிலைமை இருந்தது. இக்காலப்பகுதியில் குறித்த முஸ்லிம் கிராமங்களில் சமய, சமூகப் பண்பாடானது உடத்தலவின்னை மடிகே கிராமத்தை விட சிறந்து விளங்கியதாகவும் அறிய முடிகின்றது (நேர்காணல் இல:1). உடத்தலவின்னை மடிகே கிராமத்தின் திருமண சம்பிரதாயங்கள் பற்றிய ஆய்வில், இக்கிராமத்துடனான திருமணத் தொடர்புகள் குறித்து நிலவிய, மேலுரைத்த நிலைமையினை அறிந்திருப்பது அவசியமாகும்.

### 4.3 திருமணச் சடங்குகள்

திருமணச் சடங்குகள் என நோக்கும் போது, பொதுவாக இலங்கையில் ஏனைய சமூகத்தவர்கள் மத்தியில் நிறைய சடங்குகள், சம்பிரதாயங்கள் நிலவுகின்றமை கண்கூடான விடயமாகும். ஆயினும் இஸ்லாமிய திருமணமானது மிகவும் எளிய முறையில் அமையப்பெறுமளவிலான விதிமுறைகளுடன்கூடியது (Meraj,2018.Nov). ஆயினும் இக்கிராம திருமண விதிமுறைகளில் சம்பிரதாயங்களாக பல விடயங்கள் மேலதிகமாக உள்வாங்கப்பட்டுள்ளதை இவ்வாய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவை பெருமளவில் ஏனைய சமூகங்களுடனான தொடர்பினால் ஊடுருவிய அம்சங்களாகவே இனம்காண முடிகின்றது.

அதன்படி, திருமண சம்பிரதாயங்களாக ஆய்வுக் காலப்பகுதிக்குள் உள்ளடக்க வேண்டியுள்ள விடயப்பரப்பும் விரிவானதாகவே உள்ளது. ஒரு திருமண பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதிலிருந்து தம்பதிகளுக்கு முதலாவது குழந்தை பிறப்பது வரையில் இச்சம்பிரதாயங்கள் நீளக் காணலாம். அத்தோடு அச்சம்பிரதாயங்களின் போது ஒரு சில உறவு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கி இருப்பதையும் வேறுசில பொருட்களுக்கு அடையாள ரீதியாக முக்கியத்துவம் வழங்கி இருப்பதையும் உணர முடிகின்றது.

#### 4.3.1 வரன் தேடுதலும் பெண் பார்த்தலும்

கண்டிய முஸ்லிம்களது திருமண உறவுகளை பெற்றோர் அல்லது குடும்பத்தில் மூத்த உறுப்பினர்கள் பேசிச் செய்வதே மரபாக இருந்துள்ளது. ஆயினும் இஸ்லாம் கூறுவதன்

அடிப்படையில் திருமணம் செய்யப்போகும் இருவரதும் விருப்பு அங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை. அவர்களது விருப்பையன்றி, பெற்றோர் அல்லது பாதுகாவலர்களது விருப்பை இறுதி முடிவாக ஏற்க வேண்டியிருந்தது. அதிலும் பெண்ணுடைய விருப்பம் அறிதல் என்பது கேள்விக்குறியதாகவே நிலவியது (ஜெமீல்,1996). ஆனால் இன்றைய நடைமுறையில் பெண்கல்வி, பெண்களது பொருளாதாரத் துறைகள் சார்ந்த ஈடுபாடு, சிந்தனைப் பாங்கில் ஏற்பட்ட மாற்றங்கள், இஸ்லாமிய சட்டங்களில் ஏற்பட்ட தெளிவு போன்ற காரணிகளினால் திருமணத்தில் பெண்ணின் விருப்பத்திற்குக் கண்டிய முஸ்லிம் சமூகத்தில் முக்கியம் வழங்கப்பட்டுவரக் காரணலாம்.

இக்கிராமத்தில் பெண் பிள்ளைகள் பூப்பெய்தியதும் அவள் திருமண வாழ்க்கைக்குத் தயாரானவளாகக் கருதப்பட்டாள். எனவே இளவயதுத் திருமணங்கள் அதிகரித்திருந்தன. ஆயினும் இங்கு உடல் ரீதியிலான தகைமை மட்டும் கருத்திற்கொண்டு இளவயதுத் திருமணங்கள் இடம்பெற்றதாகக் கருத முடியாது. பொதுவாக 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் பெண் கல்வி என்பது பேசு பொருளாக கிராமிய முஸ்லிம் சமூகங்களில் நிலவவில்லை. அடுப்பங்கரையில் அடங்கிக் கிடக்கும் பெண்ணுக்குக் கல்வி எதற்கு, எனும் மனப்போக்கே நிலவியது. அதற்கேற்ப இக்கிராமத்தின் சிறுவயதுப் பெண்கள் வீட்டு வேலைகள், குழந்தைப் பராமரிப்பு, வயல் வேலைகள் உள்ளிட்ட வீட்டு நிர்வாகம் சார்ந்த அத்தனை பொறுப்புக்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டனர் (நேர்காணல் இல:4). ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் 10 இலிருந்து 15 பிள்ளைகள் என விரிந்த குடும்பமாக இருக்கும் போது, தமது இளவயது சகோதரர்களைப் பராமரிக்கும் பொறுப்பு அதிகமாக மூத்த சகோதரிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருந்த இவர்களது குடும்ப அலகில் அநுபவ அறிவுமிகுந்த முதியவர்களது வழிக்காட்டுதல்கள் ஒவ்வொரு பிள்ளையினதும் வாழ்வை செம்மைப்படுத்தும் வழிமுறையாக அமையப் பெற்றிருந்தது. ஆகவே இளவயதுத் திருமணங்கள் இடம்பெற்ற போதிலும் அக்கால தலைமுறையினர் வாழ்க்கைப் பற்றிய புரிதலும் அடைவும் உடையவர்களாக மன ரீதியில் முதிர்ச்சியுற்று இருந்தனர் (நேர்காணல் இல:2) எனலாம்.

பொதுவாக பூப்படைந்ததாகக் கேள்வியுற்ற சிறுகால இடைவெளியில் பெண்ணுக்கு வரன் தேடுவதும் வரன் கேட்டு வருவதும் வழக்கில் இருந்தது. பெருமளவில் ஊரில் உள்ள பெண்களே திருமணப் பேச்சுவார்த்தைகளை எடுத்துச் செல்லும் தரகர்களாக இருந்தனர் (நேர்காணல் இல:3). என்றபோதிலும் அதிகளவிலான திருமணங்கள் குடும்பத்தவர்களாலேயே பேசித் தீர்மானிக்கப்பட்டன. ஊரில் உள்ள அனைவரும் தெரிந்தவர்கள் எனும் காரணத்தினாலும் உறவினர்களிடையிலான இடைத்தொடர்பு அதிகம் எனும் காரணத்தினாலும் வரன் தேடுதல், பெண் பார்த்தல் போன்ற திருமணம் சார்ந்த ஆரம்ப நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் நடைமுறையில் நிலவவில்லை. திருமணப் பேச்சை மேற்கொண்ட தரகர்களான பெண்கள் பணம்பெறும் வழக்கம் இருக்கவில்லை. அவர்கள் பணத்தை எதிர்ப்பார்த்து அவற்றை மேற்கொள்ளவுமில்லை. திருமண வீட்டார்கள், அவர்கள் மீதான தமது மகிழ்வை வெளிக்காட்டும் முகமாக 'பலகாரப் பெட்டி' (நேர்காணல் இல:4) என அறியப்படும் பலகார வகைகள் உடைய இனிப்புப் பொதியொன்றை வழங்கி தமது மகிழ்வை பரிமாறிக் கொண்டனர்.

#### 4.3.2 ஊர் அனுமதி

பழைய மரபில் கண்டிய முஸ்லிம் சமூகத்தவர் மத்தியில் இருவீட்டார்களதும் விருப்பம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், ஒரு நல்ல நாளில் மணமகன் வீட்டில் கல்யாண பேச்சுவார்த்தை இடம்பெறும். இது பொதுவாக கண்டிய முஸ்லிம் சமூகத்தவர் மத்தியில் நடைமுறையில் இருந்த வழக்கமாகும். இச்சபையில் ஊர் நிர்வாக சபைத் தலைவர் மத்தியஸ்தம் வகிப்பார் (நேர்காணல் இல:3). ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சீதனம், மஹர் தொகை எனும் கொடுக்கல்-வாங்கல்கள் இச்சபையில் உறுதி செய்யப்படும். இதிலிருந்து சற்று வேறுபட்ட ஒரு சம்பிரதாயம் உடத்தலவின்னை மடிகே முஸ்லிம் மக்களது திருமணத்தில் இடம்பெற்றுள்ளது.

அக்கால மக்கள் மத்தியில் இருந்த சிறந்த பண்புகளில் ஒன்றும் நடைமுறையில் காண அரிதாகக் கிடைக்கும் ஒரு பண்புமாக ஊர் தலைமைக்குக் கட்டுப்படுதல் எனும் பண்பு நிலவுகின்றது.

சமூகப் பொறுப்புடைமை, சமூகக் கடப்பாடு, தலைமைத்துவத்திற்கும் ஊரவர் தீர்மானங்களுக்கும் மதிப்பளித்தல் மற்றும் கட்டுப்படுதல் என அனைத்து விடயங்களிலும் சமூக ரீதியிலான பொது நோக்கு இருந்தமையை அடையாளப்படுத்தலாம்.

விதிவிலக்கின்றி திருமணப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றப் பின்னர் ஊரவர்களிடம் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் உடத்தலவின்னை மடிகே கிராமத்தில் இருந்துள்ளது. இதற்குப் பின்னணியில் பல தார்மீகக் காரணிகள் இருந்திருக்கலாம். அவற்றுள் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய காரணி யாதெனில், திருமணப் பந்தத்தில் இணையும் ஆண்-பெண் எனும் இருவரும் புதியதொரு குடும்ப அலகுக்கான அடிக்கல்லையிடும் சந்தர்ப்பமாக திருமணம் அமையப் பெறுகின்றது. இதன்போது அவர்கள் சமூகத்துடன் நேரடியாக அதன் ஒரு பிரதான அங்கமாக இணைந்து செயற்பட வேண்டியவர்களாக மாறுகின்றனர். அதன்போது சமூகத்தின் ஏற்பும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகின்றது. அல்லாதபோது சமூக ஒதுக்கீட்டுக்கு ஆளாக நேரிடும். ஆகவே அக்கிராமத்தவர்கள் திருமண நிகழ்விற்கான ஊரவர் அனுமதியைப் பெறும் சந்தர்ப்பமாக வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கத்தின் பின்னரான சந்திப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

திருமணத்திற்கான அனுமதியைப் பெறவென, பெரிய வெற்றிலைத் தட்டில் நிறைய வெற்றிலைகளை அடுக்கி அதனை வெள்ளைப் புடைவை ஒன்றினால் மூடி வெள்ளிக்கிழமை பள்ளிவாயிலுக்குக் கொண்டு வருவர். அங்கு தொழுகை முடிவில் குறித்த இரு குடும்பத்தாரதும் விபரம் கூறி " ...(குறித்த நபரது பெயர் விபரம்) வெற்றிலை வைக்க வந்துள்ளார்." என்பதாகக் கூறப்படும் (நேர்காணல் இல:1). இவ்வாறு குறித்த நபர்களது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்போவதாக ஊரவருக்கு அறிவிக்கப்படும். ஆட்சேபனைகள் இருப்பின் உடன் தெரிவிக்க ஒரு வாய்ப்பாக இதனைக் கைக்கொண்டனர். ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படாத போது திருமணம் பற்றிய விபரம் கூறி சமூகமளித்திருப்போருக்கு இரண்டு வெற்றிலைகள் வீதம் வழங்கி அவர்களது அனுமதியையும் சுபசோபனத்தையும் பெற்றுக் கொள்வர். வீடு திரும்பும் ஒவ்வொருவரதும் கையில் முதியவர் சிறுவர் என்ற பேதமின்றி அவர்கள் மூலம் குறித்த வெற்றிலைகள் ஒவ்வொரு வீட்டையும் அடையும். இதனூடாக ஊரில் நடைப்பெறப் போகும் திருமணம் குறித்து, ஒரே நாளில் ஊரவர்கள் அறிந்து கொள்வர். இதுகுறித்து நேர்காணலில் (நேர்காணல் இல:1) தன் அநுபவத்தைப் பகிரும்போது, சிறுவயதில் வெற்றிலையுடன் திரும்பும் தன்னைப் பார்த்து ஊரில் எங்கோ திருமண நிகழ்வொன்று நடக்கப் போவதை ஊகிக்கும் தனது தாய், பாதையில் பள்ளியிலிருந்து திரும்பும் நபர்களிடம் விபரத்தைக் கேட்டறிந்து கொள்வதாக நினைவூட்டினார். இவ்வாறாக பள்ளிவாயலில் வெற்றிலை வழங்குவது, குறித்த திருமணம் தொடர்பாக ஊருக்கு அறிவிக்கும் முறையாகவும் மறுபுறம் ஊராரது அனுமதியைப் பெறும் வழக்கமாகவும் நிலவியுள்ளது.

### 4.3.3 இராசி பார்த்தலும் திருமண நாள் குறித்தலும்

கண்டிய முஸ்லிம்களிடம் திருமணப் பொருத்தம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனை 'ந.்.சு' பார்த்தல் என்றனர். அத்தோடு பால்பார்த்து மணமகன், மணமகளது பொருத்தம் பார்க்கும் வழக்கமும் இருந்துள்ளது. இதுவே இராசி பார்த்தல் என்பதாக அறியப்பட்டுள்ளது. இன்றும் பின்தங்கிய ஒருசில முஸ்லிம் ஊர்களில் வழக்கில் இருக்கக் காணலாம் (ஜமீல்,1996).

இராசி பார்த்தல் எனும் இந்த நடைமுறையும் உடத்தலவின்னை மடிகே கிராமத்தில் வழக்கில் இருந்துள்ளது. அதாவது, மணமக்களது பிறந்த நாட்களை அடிப்படையாகக்கொண்டு பொருத்தம் பார்க்கும் ஒரு முறைமையாகும் (நேர்காணல் இல:5). திருமண நாள் குறித்தலானது பிறையினை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது. வளர் பிறை நாட்களில் மட்டுமே திருமணத்தை நிகழ்த்தினர். தேய்பிறைகளில் சுப காரியங்களை நடாத்துவதை விட்டும் பொதுவாகவே தவிர்ந்து கொண்டனர் (நேர்காணல் இல:2). இது இன்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பொதுவாக வழக்கிலிருக்கக் காணலாம். பொதுவாக திருமணங்கள் ஒரு நாள் கொண்டாட்டமாக அன்றி இரண்டு, மூன்று நாட்களுக்கு கொண்டாட்டமாக நடாத்தப்பட்டது. ஆயினும் ஆடம்பரம் இன்றிய, உறவுகளைப் பலப்படுத்தும் வகையிலான நடைமுறைகளைக் கொண்டு அமையப் பெற்றிருந்தது (நேர்காணல் இல:2).

#### 4.3.4 சீதனம்

கண்டிய முஸ்லிம்களிடம் சீதனம் பெறும் வழக்கம் இருந்துள்ளது. இது பணக்கொடை என்பதாகவும் அறியப்படுகின்றது. பணக்கொடையாக வீடு, காணி, நகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் உள்ளடங்களாக தளபாடங்கள், மாடு கன்றுகள் போன்றன வழங்கப்பட்டுள்ளன (ஜமீல்,1996). ஆயினும் சுமார் ஒரு நூற்றாண்டுக் காலப்பகுதிக்கு முன்னர் கண்டிய முஸ்லிம்களிடம் சீதனம் என்பது விரும்பி வழங்கப்பட்ட ஒன்றாகவே நிலவியது. அவர்கள் சீதனத்தை ஒரு சுமையாகக் கருதவில்லை. எனினும் தற்காலத்தில் இந்நிலைமை மாறியுள்ளது. கண்டிய முஸ்லிம்களைப் பொதுவாக நோக்கினால், மணமகனது கல்வித்தரம், தொழில், குடும்பப் பின்னணி அடிப்படையில் சீதனத்தின் எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது. நேரடியாகவோ மறைமுகமாகவோ சீதனம் என்பது ஓரளவில் நடைமுறையில் இருக்கக் காணலாம். ஆயினும் இளந் தலைமுறையினர் மத்தியில் சீதனம் மீதான எதிர்ப்புணர்வும் வெறுப்பும் வளர்ந்து வருகின்றமையும் சமூகத்தில் அவதானிக்க முடிகின்றது.

ஆய்வுக் காலப்பகுதியில் இக்கிராமத்திலும் சீதனம் பெறும் வழக்கு இருந்துள்ளது. ஆனால் இன்று பெரும்பாலான முஸ்லிம் சமூகங்களில் நிலவும் சீதன முறை போன்று அன்று நிலவவில்லை. அக்காலத்தில் வீடு, காணி நிலங்கள் உடத்தலவின்னை கிராமத்தில் எதிர்ப்பார்க்கப்படவில்லை. அவ்வாறு வழங்கும் அளவில் செல்வந்தர்களாகவும் இக்கிராமத்தவர்கள் இருக்கவில்லை. மாறாக 'உருப்படி' என அறியப்படும் சீதன முறைமை நிலவியிருந்தது (நேர்காணல் இல:2). அதாவது, சீதனமாகக் குறிப்பிட்டளவு பித்தளை பொருட்கள் கிடைக்கப் பெறுவதை மணமகன் வீட்டார் எதிர்ப்பார்த்தமையை இது அடையாளப்படுத்தியது. சிலர் இத்தனைப் பவுன்கள் வேண்டும் என்பதாக எதிர்ப்பார்த்தனர். இங்கு பவுன் என்பது அக்காலத்தில் நாணயங்கள் போன்று வடிவமைக்கப்பட்டதும் வழக்கிலிருந்ததுமான சிறிய தங்க பதக்கங்கள் (பென்டன்ட்) போன்றவையாகும்.

#### 4.3.5 பெருநாள் ஆடைகள்

திருமணப் பேச்சுவார்த்தை மேற்கொண்டு திருமண நாளும் குறிக்கப்பட்ட நிலையில் இடைப்பட்ட காலப்பகுதியினுள் இஸ்லாமிய பெருநாள் தினங்கள் வருமேயானால் மணமகன் மணமகளுக்கு புத்தாடைகளை வாங்கி அனுப்ப வேண்டியிருந்தது. அதனுடன் பெட்டியில் சோறு அனுப்பும் வழக்கமும் இருந்துள்ளது (நேர்காணல் இல:3). இச்சம்பிரதாயமானது தன் மனைவியாக வரயிருப்பவள் சார்ந்து ஆண்மகனுக்கு உள்ள பொறுப்புக்களை அடையாளப்படுத்துவதாகவும், திருமணம் நிச்சயமான பின்னர் கொண்டாடும் முதல் கொண்டாட்ட நாள் ஆகையால் வாழ்த்தினை எத்தி வைக்கும் முறையாகவும் இம்முறைமை நடைமுறையில் இருந்துள்ளது. ஆனால் இன்று பொதுவாக கண்டி முஸ்லிம் கிராமங்களில் வழக்கில் உள்ளது போலவே, விதிவிலக்கின்றி உடத்தலவின்னை மடிகே கிராமத்திலும் புத்தாடை அனுப்பும் நடைமுறையானது மணமகன் வீட்டிலிருந்து மணமகளுக்கு அனுப்பப்படுவது போன்றே மணமகள் வீட்டிலிருந்தும் மணமகனுக்கான புத்தாடைகள் அனுப்பும் வழக்கம் இருந்துவரக் காணலாம்.

#### 4.3.6 இனிப்புப் பண்டங்கள்

இன்றைய நாட்களைப் போன்று பல வகையிலான இனிப்புப் பண்டங்களது அறிமுகம் அன்றைய நாட்களில் இருக்கவில்லை. அனைத்து வகையான உணவுப் பண்டங்களும் வீட்டினர்களாளேயே தயாரிக்கப்பட்டன. கடைகளில் வாங்கும் நடைமுறை நிலவவில்லை. திருமணத்திற்காகவென தயாரிக்கப்படும் இனிப்புப் பண்டங்களும் அவ்வாறே. இக்கிராமத்தில் இனிப்புப் பண்டங்களாக தயாரிக்கப்பட்டவை பலகாரங்கள்ாகும். அதுதவிர வேறு வகையான இனிப்புப் பண்டங்கள் தொடர்பாக நேர்காணலில் அறிய முடியவில்லை. பலகாரங்கள் எனும் போது இரு வகையான பலகார வகைகள் பரிமாறப்பட்டுள்ளன. ஒன்று பயற்றுப் பலகாரம் மற்றையது ஊற்றுப் பலகாரம் என்பனவாகும் (நேர்காணல் இல:5). இவற்றுள் பயற்றுப் பலகாரம் என்பது பயற்றினை வறுத்து இடித்து பெறப்படும் மாவைப் பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்படுவதுடன், அவை வட்ட வடிவத்தில் அல்லது நாட்சதுர வடிவத்தில் பிரதானமாக தயாரிக்கப்பட்டது. அத்தோடு ஊற்றுப் பலகாரமானது, தேங்காய்ப்பாலில் கரைக்கப்பட்ட சீனியுடனான மாக் கலவையானது எண்ணையில்

சிறிது சிறிதாக ஊற்றி பொறிக்கப்பட்டு எடுக்கப்படும். இவ்விரு பலகார வகைகளும் திருமணங்களின் போது முக்கியமாக வீடுகளில் தயாரிக்கப்படும் இனிப்புப் பண்டங்களாகும். இவற்றைத் தயாரிக்க திருமணத்திற்கு இரண்டு, மூன்று நாட்கள் முன்கூட்டியே உறவுக்காரப் பெண்களும் அயல் வீட்டுப் பெண்களும் அழைக்கப்படுவது வழக்கமாக இருந்தது (நேர்காணல் இல:3).

இவற்றோடு வாழைப் பழ வகைகள் விருந்தினர்களுக்குப் பரிமாறப்பட்டன. முற்றிய நிலையில் இருக்கும் வாழைக் குழைகள் பெரிய குழிகள் தோண்டப்பட்டு, அதனுள் அக்குழைகளை இட்டு காய்ந்த வாழையிலை, வைக்கோல் போன்றனவற்றினால் மூடி புகையடித்து பழுக்கச் செய்தனர் (நேர்காணல் இல:2).

#### 4.3.7 மரவை

மரவை எடுத்துச் செல்லும் வழக்கம் இவ்வூரில் காணப்பட்டது. இன்றும் சிலரால் பின்பற்றப்படுகின்றது. அதாவது திருமணத்திற்கு முன்னர் மணமக்களது குடும்பத்தவர்கள் திருமணம் குறித்த மகிழ்வைப் பரிமாறுவதாகவும் அதனை உறுதிப்படுத்துவதாகவும் இந்த மரவை கொண்டு செல்லும் முறைமை நிலவியது. மணமகளின் வீட்டிலிருந்து முதலில் ஏழு மரவைகள் மணமகன் வீட்டிற்கு எடுத்துவரப்படுவதுடன் மறுமுறை மணமகன் வீட்டிருந்து மூன்று மரவைகள் அளவில் மணமகள் வீட்டிற்குக் கொண்டு செல்லப்படும் (நேர்காணல் இல:5). இந்த மரவையில் முன்கூறிய பலகார வகைகள் உட்பட பழ வகைகளாக வாழைப்பழம், மாதளங்காய், திராட்சை, தோடம்பழம் போன்ற பழ வகைகள் உள்ளடங்கியிருந்தது (நேர்காணல் இல:4).

#### 4.3.8 திருமணத்திற்கு முன்னரான ஏற்பாடுகள்

ஆரம்ப காலப்பகுதியில் வீடுகளுக்குச் சென்று வார்த்தைகளினால் திருமண அழைப்பை மேற்கொண்டனர். அவ்வாறு திருமண அழைப்பை மேற்கொள்ள செல்வோருள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவர் செல்வதுடன் அவருடன் மற்றொருவருமாக செல்வர். "வாப்பா சலாம் சொல்லச் சொன்னதா சொன்னாங்க"(நேர்காணல் இல:1) எனக் கூறி திகதி, கிழமை குறித்த விபரங்களைத் தெரிவித்து திருமண அழைப்பை விடுத்தனர்.

அழைப்புவிடுக்கச் சென்றவர்கள் குறித்த வீட்டில் எவரும் இல்லாத போது பக்கத்தில் உள்ள ஒரு மரத்தின் கிளையை உடைத்து கதவில் செருகிவிட்டு வருவது வழக்கமாகும். இது விருந்தொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமைக்கான அடையாளமாக இருந்துள்ளது (நேர்காணல் இல:1). இக்கிராமத்தில் இன்றளவிலும் இம்முறைமை நடைமுறையில் இருக்கக் காணலாம். எனினும் சற்று பிற்காலத்தில் எளிமையான அச்சிடப்பட்ட திருமண பத்திரிகைகளால் அழைப்பு விடுக்கும் முறைமை வழக்கத்தில் வந்தது.

அக்காலப்பகுதியில் வீட்டைச் சூழவும் பெரிய முற்றங்கள் இருந்தன. அதில் தென்னம் ஓலையால் பெரிய கொட்டகை அமைத்திருப்பர். இந்த கொட்டகை அல்லது மடுவமானது மூங்கில், கமுக மரம் போன்ற ஏதேனும் ஒன்றினால் கட்டப்படுவதே வழக்கமாக இருந்துள்ளது (நேர்காணல் இல:1). இவை திருமணத்திறகான தயார்ப்படுத்தல்களைச் செய்யவென முக்கியமாக அமைக்கப்பட்டன. அதாவது, அக்காலத்தில் உணவுக்குத் தேவையான பலசரக்குகளை தாமாகவே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இருந்தது. ஆகவே உறவினர்கள், அயலவர்கள் எனக்கூடி திருமணத்திற்குத் தேவையான மிளகாய்த் தூள், சீரகம், மஞ்சள் உட்பட்ட பொருட்களை இடித்துக் கொள்ளும் வழக்கம் காணப்பட்டது. அத்தோடு திருமண நாளிற்கான முக்கிய பானமான கோப்பியை வறுத்து, இடித்து வைப்பர். மேலும் இனிப்புப் பண்டமான இரு வகை பலகாரங்களுக்கும் தேவையான மாவினை வறுத்து இடித்தல், அரித்தல் உட்பட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வர் (நேர்காணல் இல:2).

இந்த வேலைகளைச் செய்யவென உறவினர்கள், அயலவர்களுக்கு அழைப்புவிடுப்பர். அவர்களும் பரஸ்பரம் மனிதாபிமானத்தோடு இதயபூர்வமாக இந்த வேலைகளில் மகிழ்வுடன் வந்து கலந்து கொள்வர். அத்தோடு இத்தகைய வேலைகளில் பங்குகொள்வது தமக்கு கௌரவமாகவும் கருதினர்.

விருந்தினருக்கு வழங்கவென பழ வகையாக, வாழைப்பழமே அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கியது. அதற்காக யானை வாழை, புளி வாழை என்பவற்றை பழுக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் (நேர்காணல் இல:2).

அத்தோடு ஆரம்ப காலத்தில் இக்கிராமத்தில் மின்சார வசதிகள் இல்லை என்பதனால், திருமண வீடுகளில் பெட்ரல் மெக்ஸ் (Petrol Max) பயன்படுத்தினர். இது பெருமளவில் கடை வைத்திருப்பவர்களது வீடுகளிலேயே கிடைக்கப்பெறக் கூடியதாக இருந்தது (நேர்காணல் இல:1). அது தவிர ஓரளவு வசதி படைத்தவர்களது வீடுகளிலும் இருந்தன. எனவே திருமணத்திற்காக வீடுகளுக்குச் சென்று தேவையான பெட்ரல் மெக்ஸ் விளக்குகளை சேகரித்துக் கொள்வர்.

மக்கள் விடுதலை முன்னணியினரால் அரங்கேற்றப்பட்ட கலவர நிகழ்வுகள் வரையில் ஊரில் இரவுத் திருமணங்களே நடைமுறை வழக்கில் இருந்தது (நேர்காணல் இல:1). அதனால் பந்தங்களைப் பயன்படுத்தினர். ஒரு தடியை சணல் துணியினால் (சாக்கு) சுற்றி அதற்கு மண்ணெண்ணெய் ஊற்றி தீயேற்றுவர். அதன் ஒளியில் விருந்தினர்கள் திருமண வீட்டிற்கு வருகைத் தருவர். மேலும் விருந்தினர் வருகைக்கான பாதையோரங்களை வெளிச்சமூட்ட வேண்டியத் தேவை நிலவியது. தேங்காயை அல்லது இளநீரை மேற்பாகமாக சிறிது வெட்டி, அதனுள் சணல் துணியை உள்தள்ளி அதற்கு எண்ணெய் அல்லது மண்ணெண்ணெய் ஊற்றி பற்ற வைத்திருப்பர் (நேர்காணல் இல:1).

திருமணத்திற்கு முன்னரே இடம்பெறும் மற்றொரு வழக்கமாக, 'ரபான்' அடித்தல் இடம்பெற்றது. ரபானை சிறிய தடிகளின் உதவியுடன் சற்று உயர்த்தி வைப்பர். அதன் கீழ் நெருப்புத் தணலிட்டிருப்பர். வயதான பெண்கள் சூழ இருந்து ரபான் (ஓர் இசைக்கருவி) அடித்து ஆடி மகிழ்வர். ஒரு குறிப்பிட்ட (பதம்) தாளத்திற்கு ரபானை அடிப்பதுடன் மற்றும் சிலர் ஆடுவர் (நேர்காணல் இல:1). இதுவும் திருமணம் நடக்கப் போவதை ஊருக்கு அடையாளப்படுத்தும் செயற்பாடாக இருந்தது.

#### 4.3.9 ஆடையொழுங்கு

மணமக்களது ஆடை ஒழுங்கிலும் இன்றைய வழக்கிலிருந்து பாரிய மாற்றங்கள் நிலவின. பொதுவாக இஸ்லாமிய வாழ்வியல் சட்ட ஒழுங்குகளில் ஆண், பெண் ஆடைகளது ஒழுங்கு குறித்து தெளிவான வரையறைகள் நிலவுகின்றன (இஸ்லாஹி,2003.மே). ஆயினும் அக்காலப்பகுதியில் இவை குறித்து தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கு போதிய மார்க்க அறிவுடைய சமயத் தலைவர்கள் மீதான தேவை நிலவியது. இதன் காரணமாக மாற்றுமத பண்பாட்டுச் செல்வாக்கானது முஸ்லிம்களது ஆடையொழுங்கில் அதிகமாகவே காணப்பட்டது எனலாம். அதாவது, ஆண்கள் பட்டு அணிவது இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட விடயமாகும் (இஸ்லாஹி,2003.மே). ஆயினும் இக்காலப்பகுதியில் மணமகன் பட்டு சாரம், கோர்ட் அணியும் வழக்கம் இருந்து வந்தது. சமூகத்தில் உயர் அந்தஸ்து உள்ளவர்கள் கோர்ட் அணிந்தனர் (நேர்காணல் இல:1).

அத்தோடு, துருக்கித்தொப்பி அணிவது முஸ்லிம்களது முக்கிய அடையாளமாகக் கருதப்பட்டது (நேர்காணல் இல:1,5). இக்காலப் பகுதியில் துருக்கித் தொப்பிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயமாகும். ஏனெனில் பிரித்தானிய குடியேற்ற அரசில் தமது பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றான துருக்கித் தொப்பியை நீதிமன்றில் அணிந்து வர முடியாது எனும் உரிமை மறுப்புக்கு எதிராக இலங்கை முஸ்லிம்கள் நீதிமன்றில் குரல் கொடுத்து வெற்றி பெற்றமை நினைவூட்டத்தக்க விடயமாகும். ஆகவே திருமணங்களில் மணமகன் துருக்கித் தொப்பி அணிவது முக்கிய அடையாளமாகவும் பெறப்பட்ட உரிமைகளை யதார்த்தத்தில் நடைமுறைப்படுத்தும் முக்கிய சந்தர்ப்பமாகவும் கொள்ளப்பட்டது.

அத்தோடு மணமகனுக்கு பூமாலை அல்லது கடதாசி மாலை (நேர்காணல் இல:2) அணிவித்தனர். மல்லிகைப் பூமாலையை கண்டி கோவிலுக்குப் போய் ஆர்டர் செய்து விட்டுவந்தனர். காரணம், தமிழரைப் போல நேர்த்தியாகப் பூமாலைக் கோர்க்க இவர்கள் அறிந்திருக்கவில்லை. அத்தோடு மணமகனுக்கு தங்க மோதிரம் மணமகளது தந்தையினால் அணிவிக்கப்படுவது

வழக்கமாகும். அதுமட்டுமன்றி மணமகளது சகோதரர்களில் உழைப்பவர்கள் (மச்சான்மார்) மணமகனுக்கு மோதிரம் அணிவிக்கும் வழக்கமும் இருந்தது (நேர்காணல் இல:5).

மணமகளது ஆடையானது சேலையாகவே இருந்தது. கம்பாயம் எனும் துணி வகையிலான ஆடையை அணிவித்தனர். அத்தோடு துணியொன்றினால் முகத்தை மூடியும் வைத்தனர். இத்துணி 'துப்பட்டி' என அறியப்பட்டது (நேர்காணல் இல:4). மணமகளது கூந்தலை அலங்கரித்து மலர் சூடியும் இருந்தனர். பெருமளவில் வெள்ளி நகைகள் பயன்படுத்தப்பட்டதுடன் தங்க நகைகளும் அணியப்பட்டன. மணப்பெண் அணியும் நகைகளாக பொதுவாக தோடு, வளையல், பென்டனுடனான மாலை, கொளுசு போன்றவை காணப்பெற்றன (நேர்காணல் இல:5). வெள்ளியினாலே அதிகமான நகைகள் தயாரிக்கப்பட்டதுடன் தங்கத்தாலானவையும் இருந்தன. அவைதவிர இவையிரண்டுமற்ற 'பொன்' என அறியப்படும் உலோகத்தினாலான நகைகளையும் அணிந்தனர் (நேர்காணல் இல:2).

#### 4.3.10 மருதானி

அத்தோடு திருமணத்திற்கு முன்னைய நாள் குடும்பத்தில் உள்ள திருமண வாழ்வு பற்றிய அநுபவ அறிவுடைய மூத்த பெண்களால் மணமகளுக்கு மருதாணியிடும் வழக்கமும் இருந்தது. மணமகன் வீட்டிலிருந்து மணமகனது சகோதரிகள் வந்து மருதானியிடும் வழக்கமும் நிலவியுள்ளது. மருதாணி அலங்காரமானது இன்று போல செயற்கையாகவும் வண்ண வண்ண அலங்கரிப்புகளிலும் அன்றி இயற்கையான மருதானி இலையை அரைத்து சிறிய சிறிய புள்ளிகளாக கையில் வைத்திருந்தனர். மருதானியிட்டதன் பின்னர் பெண்ணை அன்னிய ஆண்களுக்குக் காட்டுவதில்லை. இது தமிழரது பண்பாட்டுச் செல்வாக்கின் விளைவினதாகும். தமிழரது திருமண சடங்குகளில் 'நலங்கு' (மஞ்சள் பூசுதல்) இடம்பெற்ற பின்னர் பெண்ணை மறைத்து வைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

#### 4.3.11 ஊர்வலம்

திருமணத்தில் ஊர்வலம் போவதே பிரதான விடயமாக இருந்தள்ளது. ஊருக்குள் போக்குவரத்து வசதிகளோ சிறந்த பாதையமைப்பக்களோ இன்மையால் கால்நடையாகவே மக்கள் தமது போக்குவரத்தை பெருமளவில் மேற்கொண்டனர். ஆகவே திருமண வைபவங்களில் அதனை சிறப்பாக்கும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

மணமகள் வீட்டில்தான் திருமண ஏற்பாடுகள் செய்யப்படுவதனால் மணமகன் மணமகளது வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் மணமகனை யானை மீதேற்றியே அழைத்துச் சென்றனர். அதற்கு முன்னர் யானையினை ஊரில் உள்ள ஓடையில் குளிக்க வைத்தனர். யானையின் மேல் வெள்ளை விரித்தே மணமகனை அமரச் செய்தனர் (நேர்காணல் இல:2). பிரபுத்துவ சிங்கள மக்கள் வீடுகளில் யானைகள் வளர்ப்பது வழக்கமாக இருந்துள்ளது. அத்தோடு மீகம்மனை, தொரகமுவை போன்ற அண்மித்த பகுதிகளிலும் கொஸ்வத்தை எனும் உடத்தலவின்னை கிராமப் பகுதியிலும் யானை வளர்ப்பவர்கள் இருந்ததாகவும் நேர்காணலில் அறியப்பட்டது. தொரகமுவையில் யானை வளர்க்கும் சேகர அய்யா என ஊரவர்களால் அறியப்பட்ட நபர் இருந்துள்ளார். இவ்வாறு தேவைகளுக்கு பெறப்படும் இந்த யானைகளுக்கு வாடகையாக பணம் வழங்கப்படும் வழக்கம் இருக்கவில்லை என்பது இங்கு சட்டிக்காட்டத்தக்க விடயமாகும். மாறாக கித்துள் மரம் ஒன்றை அதற்கு உணவாக வழங்குவது போதியதாக இருந்தது (நேர்காணல் இல:1).

இவ்வாறு ஊர்வலம் இடம்பெறும்போது ஆடல்பாடல்கள் இடம்பெறும். அதற்காகவென தனிப்பட்ட மக்கள் குழுவினர் இருந்துமுள்ளனர் (நேர்காணல் இல:1). ஆரம்ப காலங்களில் 'தப்பு அடித்தல்' என அறியப்பட்ட ஆடல் பாடலுடனான ஊர்வல இசைவிருந்திற்காக தோட்டப்பகுதிகளில் இருந்து அதற்குரிய மக்கள் குழுவினர் அழைத்து வரப்பட்டனர். அதன் பின்பு மேளம் அடிக்கும் பண்பாடு ஊரில் வளர்ந்து வந்துள்ளது (நேர்காணல் இல:2). செல்வந்த மக்கள் கண்டி கோவிலில் நாதஸ்வரம், மேளம் இசைக்கும் குழுவினரை அழைத்து வருவர். இவர்கள் யானை மேல் வரும் மாப்பிள்ளைக்கு முன்னால் அணிவகுத்து இசைக் கருவிகளை

இசைத்துச் சென்றனர் (நேர்காணல் இல:1). புல்லாங்குழல் இசைக்கும் வழக்கமும் இருந்தது. ஆரம்ப காலத்தில் பெண் வீட்டை நெருங்கியதும் 'யா நபீ பைத்' போன்ற பைத்துக்களைப் பாடும் வழக்கம் இருந்துள்ளது (நேர்காணல் இல:2).

மாலைப் பொழுதுகளில் ஆரம்பிக்கும் இந்த ஊர்வலமானது மணமகள் வீட்டை அடையும் போது இரவு நேரத்தை நெருங்கிவிடும். ஊர்வலம் பெண் வீட்டை நெருங்கியதும் மணமகன் நடந்து வர, வண்ணான் ஒருவர் வெள்ளை நிறத் துணியை விரித்து அதற்கு ஏற்பாடு செய்வார். அவர் நீளமான மூன்று, நான்கு வெள்ளைப் புடைவைகளைக் கொண்டுவந்திருப்பதுடன் மாற்றி மாற்றி அவற்றைப் பாதையில் விரித்து மணமகன் நடந்து போக வழிசமைப்பார். பின்னர் மணமகள் வீட்டை அடைந்ததும், மணமகன் அவர் செயலுக்கு மகிழ்வாக அப்புடைவையில் குறித்தவொரு தொகைப் பணத்தை இட்டுச் செல்வது வழக்கமாகவும் முறையாகவும் இருந்தது (நேர்காணல் இல:1).

#### 4.3.12 மணமகள் வீட்டைச் சார்ந்த ஏற்பாடுகள்

#### 4.3.12.1 பட்டாசு

மணமகன் ஊர்வலம் வருவதிலிருந்து தொடர்ந்துள்ள திருமண ஏற்பாடுகளில் பட்டாசு முக்கிய இடம் பிடித்திருந்தது. பட்டாசு ஒரு சம்பிரதாய நடவடிக்கையாகக் கொள்ள முடியாத போதும் அது மனக்கிளர்ச்சியூட்டக் கூடிய ஒரு செயற்பாடாகவும் பின்னர் ஒரு பண்பாடாகவும் இக்கிராம முஸ்லிம் மக்களிடம் மாறியிருந்தது. பட்டாசு தயாரிக்கும் ஒரு சிங்கள நபர் ஊரில் இருந்துமுள்ளார். பட்டாசு தயாரிப்பவர் மணமக்கள் ஊர்வலம் சென்று முடியும் வரையில் அவர்களுடன் பயணத்தைத் தொடர வேண்டியிருந்ததுடன் அவர் பட்டாசுகளை கொளுத்த வேண்டியும் இருந்தது (நேர்காணல் இல:1). இதுதவிர உயர்ந்த சப்தமாக பட்டாசு வெடிக்க வேண்டும் என்பதற்காக பெரிய தேங்காய் உள்ளே பட்டாசு இட்டும், பால்மா கேனிகளில் (நேர்காணல் இல:1) பட்டாசுக்கான பொருட்களையிட்டு மேலே உயரச் சென்று வெடிக்க வைக்கும் ஒரு முறையும் அக்கால வாலிபர்கள் மத்தியில் நிலவியுள்ளது. இதுதவிர 'பூவெடி' (நேர்காணல் இல:1,2) என அறியப்படும் பட்டாசு போன்ற ஒன்றை வெடிக்கும் வழக்கும் இருந்துள்ளது. இதனை வெடிக்கச் செய்து மணமகனின் மீது பூக்களை விழச்செய்தனர். இவ்வாறு பல வானவேடிக்கைகளை இக்கிராம இளையவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

#### 4.3.12.2 தோரணம்

சிங்களவர்கள் மத்தியில் பிரபலமான, தோரணமிடும் வழக்கம் இக்கிராம முஸ்லிம்களிடம் இருந்துள்ளது. முஸ்லிம்களது திருமணங்களில் மிக முக்கிய இடத்தை தோரணங்கள் வகித்துள்ளன. இத்தோரணங்கள் மூங்கில் தண்டுகளை வளைத்து அதில் குருத்தோலையினால் அலங்காரங்கள் செய்து நுழைவாயில் போன்ற வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் (நேர்காணல் இல:1). தோரணங்களை அமைக்க கமுக மரம், மூங்கில் போன்றவற்றால் தேவையான வடிவில் பெரிதாகத் தோரணம் செய்தனர். இதன்மூலம் குறித்த வீட்டில் இடம்பெறப்போகும் கொண்டாட்ட நிகழ்வை ஊருக்கு அடையாளப்படுத்தினர்.

#### 4.3.12.3 ஆலத்தி எடுத்தல்

தமிழர் பண்பாடுகளுள் முக்கியமான ஒன்றான ஆலத்தி எடுக்கும் சம்பிரதாயமானது, இக்கிராம முஸ்லிம்களது திருமண சம்பிரதாயத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது. தமிழர் ஆலத்தி எடுத்தல் சம்பிரதாயத்தை, கண்திருஷ்டி கழித்தல் மற்றும் வரவேற்றல் உட்பட்ட காரணிகளுக்காக மேற்கொண்டனர். அவர்களைப் போலவே முஸ்லிம்களும் பால், மஞ்சல் தூள், சுண்ணாம்பு, மல்லிகைப்பூ, வெற்றிலை, பூமாலை, தேங்காய் என்பவற்றால் மணமகனை ஆலத்தி எடுத்தனர் (நேர்காணல் இல:5).

ஆலத்தி எடுத்தல் சம்பிரதாயத்தில் இரண்டு பீங்கான்கள் இதற்காகத் தயார்படுத்தப்பட்டதாகவும் ஒன்றில் வெற்றிலை, பால், போன்ற திரவியங்களை இட்டு தயார் படுத்தியதாகவும் மற்றைய பீங்கான் பால், குங்குமம் போன்றவை கலக்கப்பட்டு சிவப்பு நிறத்தில் இருந்ததாகவும் நேர்காணலின் போது தகவல் பெறப்பட்டது. ஆலத்தி எடுக்கப்பட்டதன் பின்னர் ஆலத்தி எடுத்த

தேங்காய், முட்டை என்பவற்றை உடைத்தனர் (நேர்காணல் இல:1). அத்தோடு மணமகனை பன்னீர் தெளித்து வரவேற்கும் வழக்கமும் இருந்துள்ளது.

**4.3.12.4 கால் கழுவுதல்**

மணமகளது தாய்மாமன் மணமகனை அழைத்து வருவதுடன் மணமகளது வீட்டுவாயிலில் வைத்து, மணமகளது சகோதரர்களுள் ஒருவர் மணமகனது காலைக் கழுவுவார். அவ்வாறு கால் கழுவியப் பின்னர் வசதி உடைய மணமகன் தன் மச்சானுக்கு தங்க மோதிரம் அணிவிப்பார் (நேர்காணல் இல:1,3).

இவ்வாறு கால் கழுவும் வழக்கம் வந்தமைக்குக் காரணமாக முன்னைய காலங்களில் மக்கள் பாதணிகள் அணியும் வழக்கத்தைப் பெரிதாகக் கொண்டிருக்கவில்லை. பாதணிகள் இன்றியே பயணங்களை மேற்கொண்டனர். அத்தோடு பாதைகளும் தார் இட்டு அமைக்கப்பட்டவையல்ல. மக்கள் தாமாக அமைத்துக்கொண்ட பாதைகளே இருந்தன (நேர்காணல் இல:1). அத்தோடு ஊரில் வாகன வசதிகளும் இருக்கவில்லை. பாட்சா என்பவரிடம் மட்டும் ஒரு மோட்டார் வண்டி இருந்துள்ளது (நேர்காணல் இல:5). எனவே மழைக்காலங்களில் பாதைகள் சேறு மிக்கதாக இருப்பதுடன் அதில் பயணித்து வருபவர்கள் கால் கழுவிவிட்டு வரும் வழக்கம் இருந்தது. எனவே திருமண வீடுகளில் வெளியே பெரியதொரு பாத்திரத்தில் நீரை நிறைத்து வைத்திருப்பதுடன் ஒரு தகரக் கேணியையும் அதில் இட்டிருப்பர் (நேர்காணல் இல:1). வருபவர்கள் தம் கால்களைக் கழுவிவிட்டு உள்நுழைந்தனர். எனவே திருமணத்தில் முக்கிய பாத்திரமான மணமகனுக்கு மரியாதை அளிக்கும் முகமாக அவருக்குக் காலைக்கழுவிவிடும் வழக்கம் இருந்துள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது, இவ்வழக்கமானது பிற்காலத்தில் சம்பிரதாயமாக உருவெடுத்திருக்கலாம்.

**4.3.12.5 காவன் எழுதுதல்**

காவன் எழுதுதல் என்பது திருமணப் பதிவைக் குறிக்கின்றது. அதாவது இன்றைய நிகாஹ் நிகழ்வுகளில் மணமகளை, வலி (பெண்ணுக்குப் பொறுப்பாளர்) மணமகனிடம் ஒப்படைக்கும் நடைமுறையாகும் (நேர்காணல் இல:2). இதன் போது, மணமகளது தந்தை மணமகனுக்கு தங்கத்தினாலான மோதிரம் அணிவிப்பது வழக்கமாகும். பொதுவாக தங்கத்தினாலான மோதிரமே அணிவிக்கப்பட்டது. அது மதிப்புக்குரிய விடயமாக திகழ்ந்தது. சிலர் கண்டி நகர் சென்று மோதிரத்தை ‘தங்கத்தண்ணி’யில் போட்டுக் கொண்டுவரும் வழக்கமும் இருந்துள்ளது. அதாவது தங்கத்தினால் செய்ய வசதியற்றவர்கள் வெள்ளியினால் செய்து அதனை தங்க நிறமாக்கக்கூடிய இரசாயனக் கலவையான தங்கத்தண்ணியில் இட்டு நிறமாற்றி வருவதாகவும் அறிய முடிந்தது (நேர்காணல் இல:2). பிற்காலத்தில் இன்றைய சட்ட ஏற்பாட்டு அமைப்பிலான திருமணப் பதிவு முறைமை வழக்கில் வந்தது. இவ்வாறு பதிவாளராக சிறிது காலம் மம்மாலி லெப்பை என்பவரும் பின்னர் தொடர்ந்து ஊருலெப்பை என்பவரும் இருந்துள்ளனர் (நேர்காணல் இல:1).

**4.3.12.6 மஹர்**

மணமகன் மணமகளுக்கு வழங்கும் மணக்கொடையே ‘மஹர்’ எனப்படுகின்றது. மணமகளுக்கு இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தில் கட்டாயமாக வழங்க வேண்டியதாகக் கூறப்பட்டுள்ள மஹர் எனும் வெகுமதியானது இங்கு வெறுமனே சம்பிரதாயமாக மட்டும் நடைமுறையில் இருந்துள்ளது. அதாவது மஹரானது 51 ரூபாவிலிருந்து 101 ரூபா வரையில் வழங்கப்படுவதாகவே பதிவில் எழுதப்பட்டதாக நேர்காணலின் (நேர்காணல் இல:3) போது அறியப்பட்டது. அதுமட்டுமன்றி, பெருமளவில் 51 ரூபாவே மஹராக பதியப்பட்டது. ஆயினும் நடைமுறையில் அத்தொகையானது பொதுவாக மணமகளுக்கு வழங்கப்படுவதில்லை. அதனை பின்னர் ஹலால் சொல்லிக் கொள்ளுமாறு கூறும் வழக்கமே இருந்துள்ளது (நேர்காணல் இல:4).

**4.3.12.7 தாலி கட்டுதல்**

தாலிகட்டுவதற்கு முன்னர் மணமேடையில் அமர்ந்திருக்கும் மணப்பெண்ணிடம் தேசிக்காய், பாக்கு, பூவிரி போன்றவை இட்டு சுற்றப்பட்ட வெற்றிலைச் சுருள்கள் இரண்டை இரு

கைகளிலும் வழங்கியிருப்பர். மணமகன் அதனை அவளிடமிருந்து பெற்று தனக்குப் பின்னால் வீச வேண்டும் (நேர்காணல் இல:1). அதன் பின்னரே தாலிகட்டுதல் இடம்பெறும். பின்பு இருவரையும் ஒரே கோப்பையில் பால் அருந்தச் செய்தனர். இச்சடங்கின் பின்னர் மணமகன் மீண்டும் சபைக்கு வந்து விருந்துபசாரத்தில் கலந்துகொள்வார்.

தமிழரது திருமணத்தில் முக்கிய அங்கமாக இடம்பெறும் தாலி கட்டுதல் வழக்கம் இந்த முஸ்லிம்களிடம் இக்காலத்தில் இருந்துள்ளது. அதாவது அவர்கள் திருமண நாளில் தாலி கட்டுதல் என இதனை அறிந்த போதும் திருமணத்திற்குப் பின்னர் அந்த மாலையை தாலி என விளிக்காது 'கரிசமணி' என்பதாக அழைத்தனர். இந்தத்தாலியானது திருமணத்தில் மணமகனது செலவுக்குரிய ஒன்றாகவே இருந்துள்ளது. அத்தோடு தாலியானது ஆரம்ப காலத்தில் கருப்பு நிற மணிகளினால் கோர்க்கப்பட்டதாக இது இருந்தது. பிற்காலத்தில் மூன்று வரிகளுடையதாகக் கோர்க்கப்பட்டதுடன் இடையிடையே சிவப்பு நிறத்தில் பவள மணிகளும் இதில் இணைக்கப்படலானது. இந்த கறுப்பு மணிகளுடன் இடையில் ஒரு பவுன் அல்லது அரைப் பவுன் என அறியப்படும் சிறிய வட்ட வடிவ பென்டன்களை சேர்த்து அணிந்தனர். அதன் பின்னரே 'சவடி' என இன்று பொதுவாக அறியப்படும் மாலையினை இங்குள்ள முஸ்லிம்கள் திருமணத்தில் அணிகின்றனர் (நேர்காணல் இல:4).

அக்காலப் பெண்கள் இதனை மிகவும் உயரிய மரியாதையுடன் பாதுகாத்தனர். மாலை அருந்து மணிகள் சிதருவதை அபசகுனமாகக் கருதினர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அம்மாலையைக் திரும்ப கோர்ப்பதை தமது முழுமுதல் வேலையாகக் கொண்டனர்.

#### 4.3.12.8 அறை அலங்காரங்கள்

திருமணத்தில் மணமகளின் வீட்டினுள்ளே மணமேடை வைக்கும் வழக்கம் இருந்துள்ளது. மணமகள், மணமகன் என்போர் திருமணத்தில் அமரும் இடம் மற்றும் அவர்களது அறை என்பவற்றை அலங்கரித்து வைத்தனர். இதற்காக ஊரில் 'பட்டக் கடதாசி' என அறியப்படும் மெல்லியக் கடதாசிகளைப் பயன்படுத்தியதோடு இயற்கை பூக்கள், இலைகளையும் பயன்படுத்தினர். மணமேடையை அலங்கரிக்க துணிகளையும் பயன்படுத்தினர் (நேர்காணல் இல:2,3).

#### 4.3.12.9 விருந்து உபசாரம்

விருந்துபசார நடவடிக்கைகளிலும் எளிமை இழையோடியிருந்தது. நிலத்தில் பாய் விரித்து விருந்துபசார எற்பாடுகளை செய்திருந்தனர். விருந்துபசாரத்தில் பரிமாறப்பட்ட உணவு வகைகளாகப் பின்வருவனவற்றை அடையாளம் காணலாம். திருமணம் பெருமளவில் இரா வேளைகளில் நடைப்பெற்றதனால் விருந்தாக சோறு மற்றும் கறிவகைகள் இருந்தன. சோறே பிரதான உணவாகத் திகழ்ந்தது. வழங்கப்பட்ட கறி வகைகளாக மாட்டிறைச்சி, பருப்பு, புளியானம், அச்சாறு, மாங்காய் பச்சடி, பப்படம் என்பன விளங்கின (நேர்காணல் இல:1,2).

விருந்துக்குத் தேவையான அரிசியைப் பெண்கள் சீட்டுப் பிடித்தல் முறையினூடாகவே பொதுவாகப் பெற்றனர். கூட்டுறவுக் கடைகளில் வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசியை சீட்டுப் பிடித்தனர். இதனூடாகவே தேவையான அரிசியை தயார்படுத்தினர். பருப்பு விஷேடமான கறி வகையாக இருந்தது. மரக்கறி வகைகள் போஞ்சிக்காய், கத்தரிக்காய் என்பன உள்ளடங்கியிருந்தன. அத்தோடு குருமா (இறைச்சியை மிளகுச் சுவை சேர்த்து சமைக்கும் சமையல்) மற்றும் மாட்டிறைச்சிக் கறியும் விஷேடமாக பரிமாறப்பட்டது. மாட்டிறைச்சியினை மிளகிட்டு சமைத்தனர். ஆயினும் அக்காலத்தில் கோழி இறைச்சியை சாப்பிடும் வழக்கம் பெரிதாக நிலவவில்லை. அவர்கள் கோழியினை முட்டைக்காக மட்டுமே வளர்த்தனர். மணமகனது விருந்துத் தட்டில் மாத்திரம் கோழி இறைச்சி வைக்கப்படுவதுடன் மணமகனது விருந்துத் தட்டானது மற்றொரு விருந்துத் தட்டினால் மூடப்பட்டு கொண்டுவரப்படும் (நேர்காணல் இல:1).

மாட்டிறைச்சியானது திருமணம், கந்தூரி, பாத்திஹா போன்ற விஷேட நிகழ்வுகளின் போது மாத்திரமே சமைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒரு இறாத்தல் இறைச்சியானது 15 சதமாக இருந்தது. இக்காலத்தில் ஊரில் இறைச்சிக் கடைகள்

இருக்கவில்லை. காரணம் மாட்டிறைச்சியை வாங்குமளவில் பணம் படைத்த மக்கள் பெருமளவில் இங்கு இல்லாமையாகும் (நேர்காணல் இல:2).

இலங்கையில் உள்நாட்டு யுத்தக் காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக மக்களது வாழ்க்கை நிலை பின்னடைந்த காலங்களில் அவர்களது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில் கடினமான நிலைமை நிலவியது. ஆகவே அக்காலப்பகுதியில் திருமண வைபவ விருந்துபசாரமானது பிரதான உணவுவேளையாக அன்றி இனிப்புப் பண்டங்கள் மாத்திரம் விருந்தாக வழங்கும் வழக்கம் உருவானது. இதனை 'எட்ரோம் எடுத்தல்' (At Home) என அழைத்தனர் (நேர்காணல் இல:2,5).

விருந்துபசார இடத்தில் மணமகன் அமரும் இடம் புறம்பாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. அவர் அமரும் இடத்தின் மேல் பகுதியில் வெள்ளைப் புடைவையால் முகப்பு போல் அமைத்திருப்பர். அது 'மேக்கட்டி' என அழைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி மணமகன் அமர்வதற்கு வெள்ளை விரிப்பொன்று விரிக்கப்பட்டிருந்தது (நேர்காணல் இல:1).

விருந்துபசாரத்தில் வெற்றிலை, சுருட்டு, சிகரட், பீடீ என்பனவும் பகிரப்பட்டன. உணவுப் பரிமாறப்பட முன்னர் வெற்றிலைத் தட்டை வழங்கி வெற்றிலை உண்ண வழங்குவர் (நேர்காணல் இல:1). அக்கால மக்களிடம் வெற்றிலையை சாதாரணமாக ஆண், பெண் வேறுபாடின்றி இருபாலாரும் பொழுதுபோக்காக தாம் கலந்துரையாடும் இடங்களிலும் பொது இடங்களிலும் உண்டுவந்தனர். அதன் பின்னர் படிக்கம், தண்ணீர் செம்பு என்பவற்றை வழங்குவர். வெற்றிலையை படிக்கத்தில் துப்பி வாயை சுத்தம் செய்த பின்னர் விருந்துபசாரத்தைத் துவங்கினர். சுருட்டானது அக்காலத்தில் பொதுவாக வயது முதிர்ந்த ஆண்களால் புகைக்கப்பட்ட ஒன்றாகும். இது தவிர சிகரட், பீடீ என்பனவும் வழங்கப்பட்டன. சிகரட், பீடீ என்பவற்றை சிறிய தகரப் பேணிகளில் அடுக்கி வைத்திருந்தனர் (நேர்காணல் இல:2). அவையும் சாதாரணமாக, ஆண்கள் மத்தியில் பாவனையில் இருந்த சில பழக்கவழக்கங்களாகவே இருந்தன. அப்பழக்கம் உள்ளவர்கள் அவற்றை விருந்துபசாரத்தில் பெற்றுக்கொண்டனர்.

மணமகனது வீட்டார்கள் விடைபெற்றுச் செல்ல முன்னர் 'கோப்பிக்குடி' என அறியப்படும் பலகாரத்துடன் கோப்பி அருந்தும் விருந்து இடம்பெற்றது (நேர்காணல் இல:1,2,4,5). இவ்வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

#### 4.3.12.10 மொய் எழுதுதல்

மொய் எழுதுதல் என்பது யாதெனில், திருமணத்திற்காக வருகைத்தரும் விருந்தினர்கள் தங்கள் திருமணப் பரிசாக வழங்கும் பணத்தொகையை எழுதும் நடைமுறையாகும். விருந்துபசாரத்தின் பின்னரே மொய் எழுதுதல் இடம்பெற்றது (நேர்காணல் இல:2). இது இன்றைய ஆடம்பரத் திருமணங்களில் ஹோட்டல்களில் நடைபெறும் திருமணங்களில் வரவேற்பு மேசையில் வைத்து பரிசுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு பெயர் விபரம் குறிக்கப்படுவது போன்ற ஒரு வழக்கமாகும்.

இவ்வூரில் குறித்த பணத்தொகையும் வழங்கிய நபரது விபரமும் ஒலிபெருக்கியில் உடனுக்குடன் அறிவிக்கப்படும் வழக்கம் இருந்தது. அதற்காக பள்ளிக் கணக்குப் பிள்ளை அல்லது ஊரில் முக்கிய நபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார் (நேர்காணல் இல:1).

20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் 25 சதத்திலிருந்து மொய் வழங்கப்பட்டது. அதிகளவில் 50 சதம் மொய்யாக வழங்கப்பட்டது. ஒரு ரூபாய் வழங்குவது அக்காலத்தில் பெரியத் தொகையாக கருதப்பட்டது. இரண்டு ரூபாய் வழங்குவதானது மிகவும் பெரியத் தொகையாக இருந்தது. பிற்பட்ட காலப்பகுதிகளில் அதிகளவில் வழங்கப்பட்ட பரிசுத் தொகையாக ஒரு ரூபாய் ஒரு சதம் விளங்கியது (நேர்காணல் இல:2).

திருமணத்தில் சேரும் மொய் தொகையானது 100 ரூபாயை விடக் கூடாது. காரணம் ஆரம்ப காலப்பகுதிகளில் பத்திலிருந்து பதினைந்து சஹன் அளவில்தான் மக்கள் விருந்துக்கு

அழைக்கப்படுவர் (ஒரு சஹனுக்கு ஆறு பேர்). ஊரில் பெருளவு மக்கள் தொகை இருக்கவும் இல்லை.

#### 4.3.12.11 ஒலிபெருக்கி

இத்திருமணங்களில் ஒலிபெருக்கியானது முக்கிய இடம்வகித்தது. ஒலிபெருக்கியில், பாட முடியுமான பெரியவர்கள் (ஆண்கள்) முன்வந்து பாடல்களைப் பாடி நிகழ்வை களிப்பூட்டினர். அதுமட்டுமன்றி சினிமாப் பாடல்களை நிகழ்வுப் பொருத்தத்துடன் ஒலிப் பெருக்கியில் ஒலிக்க விட்டனர். உதாரணமாகக் கூறினால் பெண்ணை மணமேடைக்கு அழைத்து வரும்போது,

"வாராயோயெந் தோழி வாராயோ

மணப்பந்தல் காண வாராயோ" எனும் பாடலையும்

மணமகன் வீட்டுக்கு மணமகளை அழைத்துச் செல்லும் போது,

"புருஷன் வீட்டில் வாழப்போகும் பொண்ணே

தங்கச்சி கண்ணே

சில புத்திமதிகள் சொல்லுறேன் முன்னே" எனும் பாடலையும்

ஒலிக்கச் செய்ததாக நேர்காணலின் (நேர்காணல் இல:5) போது அறியப்பட்டது.

#### 4.3.13 உடுப்புப் பெட்டி

மணமகன் தனது மனைவியின் தாய்க்கு சேலை மற்றும் குறித்தளவில் சிறிய தொகைப் பணமும் அதில் வைத்து வழங்கும் வழக்கமும் இருந்ததாக (நேர்காணல் இல:4) நேர்காணலின் போது விளக்கப்பட்டது. இது 'மாமி சாரி' என ஊரவர்களால் அறியப்பட்டது. 'உடுப்புப்பெட்டி' என அறியப்படும் மணமகனால் மணமகளுக்குக் கொண்டுவரப்படும் ஆடைகளடங்கிய துணிப்பெட்டிக்கு மிக முக்கிய இடம் வழங்கப்பட்டது. ஆயினும் மணமகனுக்கு மணப்பெண் வீட்டில் இருந்து இவ்வாறு ஆடை வழங்கும் முறை எதுவும் நிலவவில்லை. ஆனால் இன்றைய நடைமுறையில் இருவருக்கும் இருவீட்டாரிலிருந்தும் துணிகள் பரிமாறிக்கொள்ளப்பட்டுகின்றன.

#### 4.3.14 மணமக்களை குளிப்பாட்டுதல்

திருமண நாளன்று மணமகனது வீட்டிலிருந்து மணப்பெண்ணைக் குளிக்க வைக்கவென பெண்கள் வருவர். அவ்வாறு வருபவர்கள் எழு பேர் அளவில் இருக்க வேண்டும் எனும் வழக்கம் இருந்தது. திருமணத்திற்கு அடுத்த நாளும் மணமக்களை குளிக்க வைக்கவென மணமகன் வீட்டிலிருந்து பெண்கள் வருவர். மணமகனது சகோதரிகளே இவ்வாறு வருகை தந்தனர். இதன்போது கேலிப் பேச்சுக்கள் இடம்பெற்றது. நீராடி முடிந்ததும் மணமக்களை ஆலத்தி எடுத்தனர் (நேர்காணல் இல:4).

#### 4.3.15 திருமணத்தைத் தொடர்ந்துவரும் நாட்களில் மணமக்கள்

திருமண நாளில் இருந்து ஏழு நாட்கள் வரையில் மணமகள் வீட்டிலேயே மணமக்கள் இருப்பர். இது இன்றும் இங்கு சிலரால் பின்பற்றப்படுகின்றது. மூன்றாம் நாள் மணமகன் தன் வீட்டிற்குச் சென்றுவருவார் (நேர்காணல் இல:2). இதன்போது தன் மனைவியின் இளைய சகோதரரை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களும் இருந்தது. தான் மீண்டும் திரும்பி வரம்போது இனிப்புப் பண்டங்கள், பழவகைகளை எடுத்து வருவது சம்பிரதாயமாகும். இதனை ஊரவர்கள் 'மடிமாங்காய்' என்பதாக அழைத்தனர் (நேர்காணல் இல:5).

#### 4.3.16 மணமக்களைப் பார்க்க வருதல்

மணமகள் தனது கணவன் தனக்காகக் கொண்டுவந்த சேலையினை தன் வீட்டில் அணிய வேண்டியது வழக்கமாக இருந்தது (நேர்காணல் இல:4). திருமணத்தின் பின்னரான ஏழு நாட்களும் மணமக்களைப் பார்க்கவென உறவினர்கள் வந்து போவர். இந்நாட்களில் மணமக்களுக்கான உணவுகளையும் விஷேடமாக தயாரித்து வைப்பர். பிட்டு மற்றும் கோழியிறைச்சிக்கறியை காலை உணவாக சமைத்திருப்பர். மணமக்களுக்கான உணவுத் தட்டில் முழுக்கோழியைப் பொரித்து வைப்பதோடு பிட்டு குழலிலிருந்து வெளியெடுக்கும் பிட்டினை உடையாது எடுத்து வைக்க வேண்டியிருந்ததாகக் கூறினார் (நேர்காணல் இல:4).

#### 4.3.17 மாப்பிள்ளை வீட்டு விருந்து

மணமகன் வீட்டிற்கு மணமகளை அழைத்துச் செல்வதற்காக மணமகனது சகோதரிகள் உட்பட்டோர் வருகைத் தருவர். அவ்வாறு வருபவர்கள் ஏழு பேர் வர வேண்டும் எனும் வழக்கம் இருந்தது (நேர்காணல் இல:5). அவர்களுள் இரண்டு முறை திருமணம் செய்தவர்கள் வரக் கூடாது என்பது நடைமுறையில் இருந்தது. அது விதிமுறையாகவன்றி பொதுவான நடைமுறையாக இருந்தது. ஊரினுள்ளே நடைப்பெறும் திருமணமாயின் எவ்வளவு தூரமாயினும் மணமகனும் மணமகளும் கால்நடையாகவே செல்வது வழக்கமாக இருந்தது (நேர்காணல் இல:1). மணமகன் வீட்டிற்கான பயணமானது பின்னேரங்களிலேயே இடம்பெற்றது. திருமணத்தின் பின்னரான மணமக்களது வாழ்க்கை மணமகனது வீட்டிலேயே தொடர்ந்தது. இவ்வாறு மணமகள் தன் வீட்டிலிருந்து மணமகன் வீட்டிற்கு போகும் போது மணமகன் கொண்டுவந்த சேலையையே அணிய வேண்டியிருந்தது. இது 'முதலாம் பட்டு' எனப்பட்டது (நேர்காணல் இல:4).

#### 4.3.18 வளைக்காப்பு ஏற்பாடுகள்

இத்திருமண சம்பிரதாயங்கள் திருமண நாளுடன் நிறைவுறும் ஒன்றாக இருக்கவில்லை. மாறாக முதல் குழந்தை பிறக்கும் வரையில் இச்சம்பிரதாயங்கள் நீண்டு சென்றன. குறித்த பெண் கர்ப்பமாக இருக்கும் காலப்பகுதியில் ஏழாவது கர்ப்ப மாதத்தில் பெண் வீட்டிலிருந்து இனிப்புப் பண்டங்கள், பழ வகைகள் என்பற்றை பெரிய தட்டுக்களில் கொண்டு பே0ாய் கொடுத்தனர். இதனை 'பெட்டிக் கொண்டுப்போதல்' என்பதாக அழைத்தனர் (நேர்காணல் இல:4,5).

இதன் பிற்பாடு மாப்பிள்ளை வீட்டிலிருந்தும் பலகார வகைகள் பெண் வீட்டினர்க்கு அனுப்பி வைக்கப்படும். இவற்றை உறவினர்களுக்கும் அயல் வீட்டார்களுக்கும் பங்கிட்டனர். இதனூடாக தமது மகள் தாயாகப் போகும் செய்தியை மற்றவர்களுக்கு எத்தி வைத்தனர் (நேர்காணல் இல:5).

அதன் பின்னர் சிலநாட்கள் கழித்து மாப்பிள்ளை தன் மனைவியை பிரசவக் காலம் வரையில் அவளது வீட்டில் விட்டுவிட்டு வருவது வழக்கமாகும். முதல் குழந்தைக்கான பிரசவ செலவானது பெண் வீட்டினராலேயே ஏற்க வேண்டியிருந்தது. அதன் பின்னர் நாட்பது நாட்கள் கழியும் வரையில் பெண் அவள் வீட்டில் தனது தாயின் அரவணைப்பில் இருப்பாள். நாட்பதாம் நாளை ஒரு வைபவமாக ஏற்பாடு செய்வதுடன் அதன் பின்னர் பெண் தனது குழந்தையுடன் மீண்டும் தனது கணவனது வீட்டில் தனது வாழ்வை நகர்த்துவதே இவ்வூரின் வழக்கமாகும். இன்றும் பிள்ளைப் பேற்றிற்காக பெண் தன் தாய் வீட்டிற்கு வருவது இக்கிராமத்தில் வழக்கமாக உள்ளது (நேர்காணல் இல:4,5).

### 4.4 திருமண சம்பிரதாயங்களில் மாற்றுமதக் கலாசாரங்களது ஊடுருவல்

உடத்தலவின்னை மடிகே கிராமமானது பௌத்த மக்களுடன் நெருங்கியத் தொடர்புடையது. அவ்வாறே 'பொட்டணி' வியாபாரம், 'மணிப்பெட்டி' வியாபாரம் போன்றவற்றை செய்பவர்களினால் தோட்டப்பகுதி தமிழ் மக்களுடனும் நெருங்கியத் தொடர்பைக் கொண்டிருந்தனர். எனவே இவ்விரு சமூகத்தவருடனான தொடர்பும் அவர்களது பண்பாட்டுச்

செல்வாக்குகளும் இவர்களிடம் அதிகமாகவே காணப்பட்டது. அவற்றைப் பின்வருமாறு வெவ்வேறாக நோக்கலாம்.

#### 4.4.1 சிங்களவரது பண்பாட்டுச் செல்வாக்குகள்

பண்பாட்டுச் செல்வாக்குகள் என நோக்கும் போது பௌத்தர்களது பண்பாட்டுச் செல்வாக்கு இவர்களது திருமணத்தில் வெளிப்பட்டது. வெற்றிலை என்பது பௌத்தர்களது அன்றாட வாழ்வியலில் அத்தியாவசியமான ஒன்றாகும். வரவேற்பு, கொடுக்கல்-வாங்கல்கள், பண்டிகைகள், சுகதுக்க விசாரணைகள் என அனைத்திலும் வெற்றிலையின் வகிபங்கு இருக்கக் காணலாம். அதனை அடியாகக் கொண்டே இக்கிராம முஸ்லிம்களும் திருமணத்திற்காக ஊரின் அனுமதி வேண்டும் நடைமுறையில் வெற்றிலையைப் பயன்படுத்தினர். அதேபோல மணமேடையில் மணப் பெண்ணிடம் வெற்றிலைச் சுருளைக் கொடுத்து வைப்பதும் சிங்களவர்களது பழக்கமாகும். இதனை அவர்கள் மணப்பெண்ணின் மூதாதையர்களிடம் அவளது இனிவரும் பொறுப்புக்களை மணமகன் ஏற்பதற்கு அனுமதி வேண்டும் பொருளிலேயே மேற்கொண்டனர் (https://www.sjp.ac.lk/blog/poruwa-ceremony-sinhalese-buddhists-marriage-ritual/). ஆனால் முஸ்லிம்களிடம் அது ஒரு பகிடிக்குரிய விடயமாகவே நடைமுறையில் இருந்தது. மணப்பெண் இறுக்கமாகப் பற்றிருக்கும் வெற்றிலையை மணமகன் எடுத்து அவள் பின்னால் போட வேண்டியிருந்தது (நேர்காணல் இல:*1*).

தோரணம் கட்டுதலும் சிங்களவர்களிடம் பரவலாகக் காணப்படும் பண்பாடாகும். இவர்களைப் போலவே இம்முஸ்லிம்களும் திருமண வீட்டில் குருத்தோலையினாலான தோரணங்களைக் கட்டினர்.

வெள்ளை விரித்தல் நடைமுறையானது பௌத்தர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு சம்பிரதாயமாகும். பௌத்தர்கள் பிக்குகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் அவர்கள் அமரும் இடங்களில் வெள்ளை துணியை விரித்து வைப்பர். அதேபோல இவர்களும் மரியாதையளிக்கும் கருத்தில் மணமகன் யானையில் அமர்ந்து ஊர்வலம் வரும் போது யானையின் மேலும் பெண்வீட்டை நெருங்கி கால் நடையாக வரும்போது வழிநெடுகிலும் வெள்ளைத்துணியை விரித்து வைத்தனர். அத்தோடு விருந்துபசாரத்தின் போது மணமகன் அமரும் இடத்தில் வெள்ளை விரித்து 'மேக்கட்டி' எனும் துணியினாலான சிறப்பு ஏற்பாட்டையும் செய்துவைத்தனர்.

#### 4.4.2 தமிழரது பண்பாட்டுச் செல்வாக்குகள்

இந்துக்கலான தமிழ் மக்களது பண்பாட்டுச் செல்வாக்கு அதிகமாகவே இவர்களிடம் இழையோடியிருந்தது. திருமணத்தில் தாலிகட்டுதல் எனும் சடங்கானது நடைமுறையில் இஸ்லாமிய வழிக்காட்டுதலில் இல்லாத ஒன்றாகும். ஆயினும் இந்தியா உட்பட இலங்கை முஸ்லிம்களிடம் மரபாக இருந்துவரும் இவ்வழக்கமானது தமிழ் மக்களின் பண்பாட்டுச் செல்வாக்கினால் ஏற்பட்டவொன்றாகும்.

அவ்வாறே திருமண சம்பிரதாயங்களில் மணமகளது தாய்மாமன், சகோதரர்களுக்கு முக்கிய இடம் வழங்கும் வழக்கும் இவர்களிடம் வந்ததாகும். தமிழ் மக்களிடம் தாய்மாமனை திருமணம் செய்வது வழக்கமாகவும் தாய்மாமனது உரிமையாகவும் கருதப்பட்டது. முஸ்லிம்களிடம் இவ்வழக்குக் காணப்படாத போதும் அவ்வுறவிற்கு திருமணத்தில் மரியாதை அளிக்கும் வகையில் மணமகனை அழைத்துவரும் செயற்பாடானது தாய்மாமனால் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறே மாமன்-மச்சான் உறவானது தமிழரது உறவுகளில் மிக நெருங்கியதும் இறுக்கமானதுமாக அமையப் பெற்றிருந்தது. ஒருவரில் ஒருவர் பரஸ்பரம் நம்பிக்கை, விட்டுக்கொடுப்பு, உதவி ஒத்தாசையுடன் பேண வேண்டிய உறவாகவும் இருந்தது. எனவேதான் திருமணத்தில் இவர்களிடையிலான உறவின் நெருக்கத்தை அடையாளப்படுத்தும் வகையில் சில சம்பிரதாயங்கள் அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. அதனை அடியாகக்கொண்டு இம்முஸ்லிம்களிடமும் கால் கழுவுதல் சம்பிரதாயம் இடம்பெற்றிருக்கக் காணலாம். அதேபோல ஆடல், பாடல் என்பவற்றில் நாதஸ்வரம், மேளம் போன்றவற்றின் பயன்பாடும் பூமாலை அணிவித்தல், பட்டு சாரம் அணிதல் போன்றனவும் தமிழரது பண்பாட்டுச் செல்வாக்கின் விளைவினதாகக் கொள்ளலாம்.

ஆலாத்தி எடுத்தல் செயற்பாடும் தமிழரது பண்பாடுகளுள் ஒன்றாகும். அதற்குப் பயன்டுத்தப்படும் குங்குமம், மஞ்சள், தேங்காய், மல்லிகைப் போன்ற பொருட்களும் தமிழரால் புனிதமாகக் கருதப்படும் பொருட்களாகும். அத்தோடு பால், பழம் என்பது தமிழரது திருமணத்தில் முக்கியப் பொருட்களாகும். ஆதற்கேட்ப இவர்களும் மணமேடையில் வைத்து மணமக்களுக்கு பால் அருந்த வழங்கியதோடு ஆலாத்தி எடுக்கும் தட்டு போன்றவற்றில் பாலைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவைத்தவிர சில பண்பாட்டு அம்சங்களை இவ்விரு சமூகத்தவரிலிருந்தும் பெற்றிருந்தனர். இவற்றில் இராசி பார்த்தல் செயற்பாட்டைக் குறிப்பிடலாம். இதிலிருந்து வேறுபட்ட முறையாயினும் மணமக்களது பொருத்தம் பார்த்தல் என்பதில் யாவும் ஒரே பின்னணியை உடையதாகவே அமையப் பெற்றிருந்தது. தமிழர்கள் ஜாதகம் பார்த்தல் எனவும் சிங்களவர்கள் கேந்திரம் பார்த்தல் எனவும் தத்தம் சம்பிரதாயமாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### 4.5 திருமண வைபவ ஏற்பாடுகளில் வெளிப்பட்ட சமூகங்களிடையிலான சகவாழ்வு

இன்று அதிகமாக வாதிக்கப்படும் தலைப்பாகவும் சமூகத் தேவையாகவும் இருக்கும் சகவாழ்வானது அக்காலத்தில் சிறப்பாகவே அமையப்பெற்றிருந்தது. இன்று பேசப்படுவது போன்று மாற்று சமூகத்தவர்களுடன் கரைந்து போகாது கலந்து வாழுதல் என்பது அக்காலத்தில் உடத்தலவின்னை கிராமத்தில் எந்தளவில் சாத்தியமாக இருந்தது என்பது இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும். மேற்கூறியது போல அவர்களிடம் ஏனைய சமூகத்தவர்களது பண்பாட்டு செல்வாக்கு அதிகமாகவே இருந்தது. ஆயினும் அவர்கள் அவற்றில் தமக்கான தனியான பண்புகளுடனான அம்சங்களை உள்ளீர்த்திருந்தனர். ஏனைய சமூகத்தவர்களுடனான பண்பாட்டு அம்சங்களது ஒத்திசைவு நிலவினாலும் அவர்களது சகவாழ்வு அவற்றில் தங்கியிருக்கவில்லை. சமகாலத்தில் முஸ்லிம் சமூகத்தவர் மத்தியில் சககாழ்வு என்பதனூடாக விளங்கிக்கொள்ளப்பட்டிருக்கும் பொருளில் இருந்து வேறுபட்ட ஒரு பொருளில் அவர்கள் சகவாழ்வை வாழ்ந்து காட்டினர்.

இன்று சமூகங்களிடையிலான உறவில் சலன நிலை தோன்றும் போது முஸ்லிம் சமூகத்தவர்கள் செய்ய விளையும் செயலாக, ஏனைய சமூகத்தவர்களது விழாக்கள், வழிபாடுகளில் தங்களது பங்களிப்புக்களை வழங்குவதனை காண முடிகின்றது. ஆயினும் அக்காலத்தில் இந்நிலைமை நிலவவில்லை. பரஸ்பரம் குறித்த இரு சமூகத்தவர்களும் தமது அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் ஒருவரில் ஒருவர் தங்கி இருந்ததுடன் மனப்பூர்வமாக ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் உதவி ஒத்தாசைகளை செய்துகொண்டனர். அது விவசாய நடவடிக்கைகளில் மட்டுமன்றி அவர்களது வாழ்வியல் முறையாகவே இழையோடியிருந்தது.

இங்கு இக்கிராம முஸ்லிம்களது திருமண சம்பிரதாயங்களில் இழையோடியிருந்த சகவாழ்வு அம்சங்களை அடையாளப்படுத்தும் போது பின்வருமாறு கூறலாம். திருமணப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற பின்னர் வீட்டில் கொட்டகை அமைத்தல் போன்ற செயற்பாடுகளில் இருந்து திருமணம் முடியும் வரையில் ஏனைய சமூகத்தவர்களது பங்களிப்பு இருக்கக் காணலாம். கொட்டகை அமைத்தல் உள்ளிட்ட ஏற்பாட்டு வேலைகளில் சிங்கள மக்கள் வந்து கலந்து கொண்டனர். அதேபோல வண்ணான் தொழில் செய்பவர்கள் பெருமளவில் சிங்களவர்களே இருந்தனர். இது அவர்களது குல முறைமைக்குட்பட்ட பரம்பரைத் தொழிலாக விளங்கியது. ஊர்வலத்தின் போது மணமகனுக்கு வெள்ளை விரிக்கும் வண்ணானது பங்களிப்பும் இங்கு வெறுமனே பணத்தை எதிர்ப்பார்த்து செய்யும் செயலாக இருக்கவில்லை. அதேபோல யானை வளர்க்கும் சிங்களவர்களும் திருமணத்தில் பயன்படுத்தப்படும் தமது யானையினை பண நோக்கிற்காக அழைத்துவரவில்லை. ஏற்கனவே கூறப்பட்டது போல அந்த யானைக்கு உணவிற்காக ஒரு கித்துள் மரம் வழங்குவது போதியதாக இருந்தது.

இவ்வாறு திருமணமொன்றில் வேலைகளை செய்வதை கௌரவத்திற்குரிய செயலாகவும். பரஸ்பர உதவியாகவுமே கருதினர். ஏனையோருக்கு உதவி செய்வதனை தமக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாகவும் மகிழ்வுக்குரிய செயலாகவுமே எண்ணினர். அவர்களது உள்ளங்களில் தன்னல சிந்தனைகளோ நடத்தையில் சுயநல போக்கோ வெளிப்படவில்லை (நேர்காணல் இல:2). எனவே சமூகங்களிடையிலான இன உறவில் விரிசல் ஏற்படவோ, நம்பிக்கையற்றுப் போகவோ,

விரோதங்கள் வேர்கொள்ளவோ வாய்ப்பாகவில்லை. காரணம் அவர்களது வாழ்வில் சமூகங்களிடையிலான உறவில் இடைவெளியோ, தன்நலனோ இருக்கவில்லை. எனவே இக்கிராமத்தில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களிடையில் மிகச் சிறந்தவொரு புரிந்துணர்வுடனான உறவு நிலை வேர்கொண்டிருந்தது.

ஆனால் இன்று அரசியல், சமூக கருத்துச் செல்வாக்குகள் மற்றும் திட்டமிட்ட வகையில் பேணப்படும் சமூக இடைவெளிகள் காரணமாக புதிய தலைமுறையினர் இடையில் இந்த பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் அருகி, ஒருவரில் ஒருவர் சந்தேகக்கண் கொண்டு நோக்கும் நிலைமை அதிகரித்து வருகின்றமை வருந்தத்தக்க விடயமாக உள்ளது (நேர்காணல் இல:1). முன்னைய தலைமுறையினர் ஏனைய சமூகத்தவர்களுடன் பேணிய பரஸ்பர நல்லுறவைப் பேணுவதில் தவறிழைக்கப்பட்டமைக்கு முக்கியக் காரணி முன்னைய நூற்றாண்டு முஸ்லிம்களைப் போல புதிய தலைமுறையினர் ஊரில் உள்ள மாற்று சமூகத்தவர்களுடனான வழமையான தொடர்புகளைக் குறைத்துக் கொண்டமையாகும்.

அவ்வாறே இவ்விரு சமூகத்தவர்களையும் முன்னர் இணைத்து வைத்த பாலமாக இருந்தது விவசாயமாகும். விவசாய வயல் நிலங்கள் முஸ்லிம்களுக்கு பெருமளவில் சொந்தமாக இருந்ததுடன் அதில் விளைச்சல் செய்பவர்களாக சிங்களவர்களும் இருந்துள்ளனர். அவ்வாறே அத்தம் முறையில் பரஸ்பர உதவி ஒத்தாசையுடன் தமது விவசாய நடவடிக்கைகளைப் இரு சமூகத்தவர்களும் பேணிக்கொண்டனர் (நேர்காணல் இல:1). ஆகவே அவர்கள் மத்தியிலான உறவுகள் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இன்றைய நிலைமையில் விவசாயத்தை விட்டும் தூரமான ஒரு சமூகமாகவே இங்குள்ள முஸ்லிம்கள் உள்ளனர். இங்குவாழும் முஸ்லிம்கள் கல்வியின்பால் அதிக அக்கறை காட்டுவதுடன் கல்வியின் மூலமான தொழில் அடைவுகளையே வரவேற்கின்றனர். அவ்வாறே சிங்களவர்களும் முன்னரை விட விவசாய நாட்டம் குறைந்தவர்களாக உள்ளனர். ஆகவே இரு சாராரிலும் தங்கியிருத்தல் நிலைமை என்பது குறைவுற்று வருவதனால் இரு சமூகத்தவர் இடையிலான நம்பிக்கையும் ஐக்கியமும் சுருங்கிக்கொண்டு வருகின்றமையை கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாடுகள் மற்றும் அவசர கால நிலைமைகளில் தெட்டத் தெளிவாக அறியமுடிந்தது.

இந்நிலைமையை மாற்றி சமூகங்களிடையிலான நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் வளர்க்க வேண்டுமாயின் ஏற்பட்டுள்ள சமூக இடைவெளியை முதலில் நீக்க வேண்டியது அவசியமாகும். அதற்கு இரு சமூகத்தவரிலும் முக்கிய அங்கங்களாகத் திகழும் திருமணம் போன்ற கொண்டாட்டங்களை ஒரு கருவியாகக் கொள்ளலாம். இந்நிகழ்வுகளில் ஏனைய சமூகத்தவர்களையும் அழைப்பு விடுப்பதன் மூலம் சமூகங்களிடையிலான உறவுகளைப் புதுப்பிக்கலாம். இருசாராரும் தமது சமய, கலாசார அம்சங்களுக்கு முரணற்ற வகையில் இரு சாராரதும் முக்கிய சமூக நிகழ்வுகளில் பரஸ்பரம் பங்கு கொண்டு அந்நிகழ்வை மேலும் களிப்புடையதாக்கலாம். அதற்கு இத்தகைய பல்வேறு சம்பிரதாயங்களுடன் கூடியவையாகத் திகழும் கொண்டாட்ட நிகழ்வுகள் வழிசமைத்துத் தரும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

## 5. முடிவுரை

20ஆம் நூற்றாண்டில் உடத்தலவின்னை கிராமத்தில் நிலவிய திருமண சம்பிரதாயங்களை அறிவதை பிரதான நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் மூலம் பல விடயங்களை தெளிவுற முடியுமாக இருந்தது. சமூக உறவுகளுக்கும் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து போற்றிய முன்னைய தலைமுறையினர் உடத்தலவின்னை கிராமத்தில் திருமணம் குறித்து நோக்கும் போது அவர்கள் சம்பிரதாயங்களால் போஷிக்கப்பட்டவர்களாக இருந்துள்ளனர். திருமணம் எனும் இரு குடும்பங்களுடன் நேரடியாகத் தொடர்புறும் நிகழ்வை சமூகமயப்படுத்தும் செயற்பாட்டினை பல்வேறு சம்பிரதாயங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

திருமண நிகழ்வை சமூகமயப்படுத்தி ஊரவர்களை அது தொடர்பாக அறியச் செய்திடுவதை நோக்காகக் கொண்டு இன்னோரன்ன சம்பிரதாயங்கள் இதன்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமையன்று வெற்றிலை வழங்கி ஊரவரிடம் அனுமதி பெறுதல், தோரணம் அமைத்தல், மணமகனை யானையில் ஏற்றி ஊர்வலமாக வருதல், ஊர்வலத்தின் போது நாதஸ்வரம் உட்பட மேளதாளங்கள், ஒலிபெருக்கி என்பவற்றைப் பயன்படுத்துதல் என யாவும் இந்நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டு பின்பற்றப்பட்ட சம்பிரதாயங்களாகும்.

அத்தோடு இச்சம்பிரதாயங்களில் ஆண்களில், குறிப்பிட்ட உறவு முறையினருக்கு சிறப்பிடம் வழங்கியிருக்கவும் காணலாம். அவர்களுள் மணமகனுக்கு மிக்க உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. கோர்ட் உட்பட்ட ஆடையொழுங்கு, யானை மீதேறி ஊர்வலமாக அழைத்து வருதல், வெள்ளை விரித்து வரவேற்றல், பன்னீர் தெளித்தல், மணமகனது வருகையை அறியச் செய்ய பட்டாசு கொளுத்துதல், ஆலத்தி எடுத்தல், கால் கழுவுதல், விருந்துபசாரத்தில் தனிப்பட்ட முறையிலான சிறப்பு போசனம், மேக்கட்டி போன்ற வேறுபடுத்திக் காட்டும் ஏற்பாடுகள் சம்பிரதாயங்களாகப் பின்பற்றப்பட்டுள்ளன. ஆகவே இச்சம்பிரதாயங்கள் மணமகனை சிறப்பித்திடும் வகையில் உருவாக்கப்பட்டவைகளாகவே புலப்படுகின்றன. அத்தோடு மாமா (மணமகளது தந்தை), மச்சான் (மணமகளது சகோதரன்), மணமகளது தாய்மாமன் உறவு முறைகளும் இச்சம்பிரதாயங்களில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளதை விளங்க முடிகின்றது. கால் கழுவுதல், மோதிரம் வழங்கப்படுதல் போன்ற சம்பிரதாயங்களூடாக இப்பண்பை அடையாளம் காண முடிகின்றது.

அதுமட்டுமன்றி புதிதாக குடும்பத்தில் இணையும் உறவினை இரு குடும்பத்தவர்களும் ஏற்று மதிக்கும் வகையில் சில சம்பிரதாய நிகழ்வுகள் பின்பற்றப்பட்டுள்ளன. அதாவது, மணமகன் தனது மாமா, மச்சான் எனும் புதிய உறவுகளுக்கு பரிசுகள் வழங்குவதைப் போலவே தனது மனைவியின் தாய்க்கும் பரிசாக 'மாமி சேலை' என அறியப்படும் சேலையையும் ஒரு சிறு தொகைப் பணத்தையும் வழங்க வேண்டியிருந்தது. மறுபுறம் மணமகளுக்கு மணமகனது சகோதரிகள் மருதாணி இடுதல், மறுவீடு அழைத்துப் போக சமூகம் தருதல் போன்ற செயற்பாடுகள் ஊடாக உறவுகளுக்கான அங்கீகாரமும் ஏற்பும் அடையாளப்படுத்தப்பட்டது.

அத்தோடு தம்மோடு வாழும் சக சமூகத்தவர்களான, குறிப்பாக சிங்கள மக்களை இந்நிகழ்வுகளில் சம்பிரதாயங்களூடாக இணைத்துக் கொண்டுள்ளனர். பட்டாசு தயாரிப்போரான சிங்களவர்களையும் யானை வளர்ப்போர், ஊர்வலத்தில் வெள்ளை விரிப்பு விரிக்க வண்ணான் உட்பட திரமணத்திற்கு முன்னரான ஏற்பாடுகளின் போது சிங்களவர்களையும் பங்குகொள்ளச் செய்தல் போன்றவற்றின் ஊடாக சிங்கள சமூகத்தவருடனான தமது உறவைப் பேணிவந்துள்ளனர். அவ்வாறே பூமாலை, மேளதாளங்கள் போன்ற சம்பிரதாயங்களுக்காக கண்டி நகர் மற்றும் மலைநாட்டுத் தோட்ட தமிழ் மக்களையும் நாடிச் சென்றுள்ளனர். இவற்றூடாக சமூகங்களிடையில் புரிந்துணர்வு, வெளிப்படைத்தன்மை, சகவாழ்வு போன்றவற்றிற்கு வழியேற்பட்டுள்ளது.

இவற்றோடு இவ்வாய்வின் மூலம் அறியக் கிடைத்த மற்றொரு விடயமாக, இன்றுவரை உடத்தலவின்னை கிராமத்தில் நிலைத்துள்ள சில திருமண சம்பிரதாயங்கள் 20ஆம் நூற்றாண்டின் தொடர்ச்சியாக அறிய முடியுமானது. அவற்றுள் மரவை எடுத்துச் செல்லுதல், இனிப்புப் பலகாரங்களாக ஊற்றுப் பலகாரம் மற்றும் பயற்றுப் பலகாரம் தயாரித்தல், திருமணத்திற்கு முன்னர் பெருநாட்கள் வரும்பட்சத்தில் மணமகளுக்கு புத்தாடைகள் வழங்குதல், திருமண அழைப்பின் போது "... சலாம் சொல்லச் சொன்னதா சொன்னாங்க" எனக்கூறி அழைப்புவிடுக்கும் பண்பாடு, மணமகள் மருதானி இட்டுக் கொள்ளுதல், மணமகளுக்கு 'உடுப்புப்பெட்டி' வழங்குதல், திருமணத்தின் பின்னர் மணமக்களை பார்க்க வருகைத் தருதல் போன்ற சம்பிரதாயங்கள் இன்றும் இக்கிராமத்தில் நிலைபெற்றுள்ளமையை நேர்காணலின் போது அறியக் கிடைத்தது. அத்தோடு மஹர் வழங்கும் செயற்பாடானது சம்பிரதாயமாக இன்றி சமய கடமையாகக் கருதி தற்போது வழங்கப்படுவதுடன் தாலி கட்டுதல் எனும் சம்பிரதாயமானது மணமகன் மூலம் அணிவிக்கப்படுதல் என்ற நிலையிலிருந்து நீங்கி திருமண நாளில் மணமகளுக்கு அணிவித்திருத்தல் வேண்டும் என்பதாக மாற்றம் கண்டுள்ளமையையும் நேர்காணலின் போது சுட்டிக்காட்டப்பட்டது (நேர்காணல் இல:4,5).

இவைதவிர இராசி பார்த்தல், மணமகனை ஊர்வலமாகக் கூட்டிச் செல்லுதல், பட்டாசு கொளுத்துதல், தோரணம் அமைத்தல், ஆலாத்தி எடுத்தல், கால் கழுவுதல், மொய் எழுதுதல், ஒலிபெருக்கிப் பயன்பாடு, விருந்துபசாரத்தில் மணமகனுக்கென இருந்த தனியான சிறப்பு ஏற்பாடுகள் (மேக்கட்டி), வெற்றிலை, சிகரட், பீடி வழங்குதல் போன்ற திருமண சம்பிரதாயங்கள் தற்கால உடத்தலவின்னை கிராம மக்கள் மத்தியில் வழக்கொழிந்து போயுள்ளமையை இவ்வாய்வின் மூலம் அறிய முடியுமானது.

அதேவேளை கால மாற்றங்களுக்கு ஏற்ப சில சம்பிரதாயங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கின்றமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவொன்றாகும். அதாவது மணமக்களது ஆடை முறைகள், விருந்துபசார உணவு வகைகள், திருமண மண்டப ஒழுங்குகள், வழங்கப்படும் மஹர் தொகை போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை சம்பிரதாயங்கள் எனும் எண்ணக்கருவிலிருந்து நீங்கி சமகாலப் போக்கிற்கு ஏற்ப வாழுதல் எனும் எண்ணப்போக்கில் இளம் தலைமுறையினரது தெரிவின் அடிப்படையில் திட்டமிடப்பட்டு திருமண வைபவங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஆகவே உடத்தலவின்னை மடிகே கிராமத்தில் 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் நிலவிய திருமண சம்பிரதாயங்களூடாக சமகால சமூகத்தவருக்கு பெற முடியுமான வரலாற்றுப் படிப்பினைகள் அல்லது முன்மாதிரிகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். அதாவது, சமூகத்துடனான உறவை அல்லது மனிதர்களுடனான இடைத் தொடர்பை அதிகரித்துக் கொள்ள இவ்வாறான முக்கிய நிகழ்வுகளைப் பயன்படுத்துதல், சமூகத் தலைமைத்துவத்தை மதித்துச் செயற்படுதல், ஏனைய சமூகத்தவர்களையும் இணைத்துக் கொண்டு முக்கிய நிகழ்வுகளை கொண்டாடுவதன் மூலம் சமூகங்களிடையிலான சந்தேகங்களை போக்கி நல்லிணக்கத்திற்கு வழியேற்படுத்துதல், தமக்கென்ற தனியான பண்பாட்டம்சங்களைப் பேணுவதனூடாக சமூகத்தின் அடையாளத்தையும் தமது சமூக வரலாற்றின் தொன்மையையும் பாதுகாத்துக் கொள்ள முடியுமாகின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## உசாத்துணைகள்

அல்குர்ஆன் தர்ஜுமா.

ஸுனன் திர்மதி.

இஸ்லாஹி, முஹம்மத் யூஸுப்.`.. (2003.மே) (மொ.பெ.) எம்.எம்.அப்துல் காதிர், வாழ்க்கைக் கலை. இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.

ஜெமீல்,எஸ்.எச்.எம். (தொகு) (1996). கண்டி மாவட்ட முஸ்லிம்கள்-வரலாறும் பாரம்பரியமும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

Jaafar, Mohammed Imani. (2011). Womwn's Rights in Islam regarding Marriage and Divorce. *Journal of Law and Practice, vol.4.*

Meraj, Meraj Ahamed. (2018.Nov). The Importance of Marriage in Islam. *International Journal of Research Granthaalayah.Vol.6 Iss.11.*

https://www.sjp.ac.lk/blog/poruwa-ceremony-sinhalese-buddhists-marriage-ritual/